வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු








Email : news@eelanadu.lk | மலர் : 01 | 25.06.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 204 | பக்கங்கள் : 16




# ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் அரசியல் கைதிகள் 16 பேர் விடுதலை

## ஏனையோரையும் உடன் விடுவிக்குமாறு உறவினர்கள் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 25

சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் 16 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பொசன் பூரணை தினத்தையொட்டி ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த 09 பேரும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 06 பேரும், மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரும் உள்ளடங்குகின்றனர்.

இதன் அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த 15

# பொதுமன்னிப்புக்கு துமிந்த எந்த அடிப்படையில் தெரிவு?

## ஜனாதிபதி தெளிவுபடுத்தவேண்டும் என கோருகின்றது சட்டத்தரணிகள் சங்கம்

கொழும்பு, ஜூன் 25

பொதுமன்னிப்பு வழங்குவதற்கு துமிந்த சில்வா எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டார் என்று கேள்வியெழுப்பியுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இது தொடர்பில் மேலும் பல கேள்விகளை ஜனாதிபதியிடம் முன்வைத்து அவை தொடர்பான விவரங்களை தமக்கும் பொதுமக்களுக்கும் வெளிப்படுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. 15

துமிந்தவுக்கு பொது மன்னிப்பு;

# மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் கடும் கண்டனம்

ஜெனிவா, ஜூன் 25

துமிந்த சில்வாவிற்கு பொதுமன்னிப்பை வழங்கும் இலங்கை ஜனாதிபதியின் முடிவை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் கடுமையாக விமர்சித்துள் 15

# 45 பேர் மரணம்!



## மொத்த உயிரிழப்பு 2,814

கொழும்பு, ஜூன் 25

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மேலும் 45 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்த 15

யாழ்.மாவட்டத்தில் 34 பேர் உட்பட

# வட மாகாணத்தில் மேலும் 58 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 34 பேர் உட்பட வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 58 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 15



# பரபரப்புக்கு மத்தியில் நாடு திரும்பிய பஸில்

கொழும்பு, ஜூன் 25

பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் பிரதானியும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநருமான முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அமெரிக்காவில் இருந்து நேற்று நாடு திரும்பினார். 15

# 1,941 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜூன் 25

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,941 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

நாட்டில் பல வாரங்களின் பின்னர் நாளாந்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 15

# ஜூலை – ஓகஸ்டில் இந்தியாவின் தடுப்பூசி இலங்கைக்கு கிடைக்கும்!

புதுடில்லி, ஜூன் 25

கோவிட் - 19 தடுப்பூசிகளின் உற்பத்தியின் அளவைப் பொறுத்து ஜூலை அல்லது ஓகஸ்ட் மாதத்தில் இந்தியா தடுப்பூசிகளை 15






# பாரத லக்ஷ்மன் கொலை குற்றவாளியான துமிந்த சில்வாவுக்கும் ஜனாதிபதி மன்னிப்பு

## அவரின் விடுதலைக்கு எதிராக கடும் கண்டனங்கள்

கொழும்பு, ஜூன் 25

பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர படுகொலைச் சம்பவத்தில் மரணதண்டனைக் கைதியான துமிந்த சில்வா, ஜனாதிபதியின் விசேட பொதுமன்னிப்பின் கீழ் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு தமிழ் அரசியல் கைதிகள் 16 உட்பட 93 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில், மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த 15

# தொற்று கட்டுப்பாடு செயலணியை பிரதமரே பொறுப்பேற்க வேண்டும்!

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 25

"கோவிட் வைரஸ் தாக்கத்தை கட்டுப் படுத்தும் செயல்திட் டங்களை முன்னெ டுக்கும் ஜனாதிபதி செயலணி தோல்வி டைந்துள்ளது. கோவிட் விவகாரத்தில் அரசியல் காரணிகளை அடிப்படை யாகக் கொண்டு செயல்பட முடியாது. கோவிட் தடுப்பு செயல்திட்டத்தை பாராளுமன்றம் பொறுப்பேற்க வேண்டும் என்பதை பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளோம்", என்று லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

கோவிட்-19 வைரஸ் தடுப்பு திட்டத்தில் காணப்படும் குறைப்பாடுகள் குறித்து கருத் துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட் டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கோவிட்-19 வைரஸ் கட்டுப்பாடு ஜனாதிபதி செயலணியின் செயல்பாடுகள் தோல்வியடைந் துள்ளது. இதனை பல விடயங்கள் வெளிப்படுத்தி யுள்ளன. அரசியல் காரணிகளை அடிப்படை யாகக் கொண்டு கோவிட் பரவலை ஒருபோதும் கட்டுப்படுத்த முடியாது. கோவிட் -19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் வகையில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள செயல்பாடுகள் அதிருப்தியளிக்கின்றன.

கோவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத் தும் செயல்திட்டங்கள் கிராமிய மட்டத்தில் இருந்து முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு பாராளுமன்றம் ஊடாக அனைத்து அரசியல் கட்சி தலைவர்களையும் ஒன்றிணைத்து ஒருமித்த கொள்கை வகுக்கப்பட வேண்டும்.

கோவிட் பரவலை கட்டுப்படுத்தும் திட்டத் தில் அரசியல் கட்சி பேதங்களை துறந்து அனைத் துத் தரப்பினரின் ஆலோசனைகளையும், ஒத்து ழைப்பையும் பெற்றுக்கொள்வது அவசியம். கோவிட் பரவலை கட்டுப்படுத்தும் திட்டத்தை பிரதமர் பொறுப்பேற்க வேண்டும் என்பதை பல முறை வலியுறுத்தியுள்ளோம். கோவிட் பரவலை கட்டுத்தடுத்தும் செயல்திட்டங்களில் விசேட துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளுக்கு முன் னுரிமை வழங்கப்படவேண்டும் - என்றார்.

(ஐ)

# விடுதலையான தமிழ் அரசியல் கைதிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த ஒன்றிணைவோம்!

## தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

16 தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு நீதியையும் மனித உரிமைகளையும் நேசிக்கும் அனைத்துத் தரப்புகளுமே பங்களித்துள்ளன. இவ்வாறு பங்களித்ததுபோல விடுதலையான இந்த உறவுகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத் துவதற்கும் நாம் ஒன்றுபட்டுச் செயல்படுவோம்", இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க. அருந்தவபாலன் நேற்று அனுப்பி வைத்தசெய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டவை வருமாறு,

"நீண்டகாலமாக சிறை வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளில் 16 பேரை அரசாங்கம் விடுவித்தமையை வரவேற்கிறோம். இதேபோல ஏனைய அரசியல் கைதிகள் அனைவரையும் உடனடியாக விடுவிக்கவேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறோம். இவர்களின் விடுதலை என்பது இவ்வளவு காலமும் சிறை வைக்கப்பட்டி ருந்தது வெறும் அரசியல் நோக்கன்றி வேறல்ல என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

இவர்கள் சிறையில் அனுபவித்த வேதனை இவர்களுக்கும் இவர்களின் குடும்பத்தினருக்கும் மட்டுமன்றி நீதியை நேசிக்கும் அனைவருக்கும் வேதனை தரும் விடயமாகும். இவை யாவற்றுக் கும் அடிப்படையாக அமைவது மோசமான பயங்கரவாதத் தடைச் சட்டமாகும். எனவே, இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி அனைத்து மக்களுக்கும் நீதியும் ஜனநாயக உரிமைகளும் கிடைக்க வேண்டுமெனில் பயங்கர வாத தடைச்சட்டம் நீக்கப்படுதல் வேண்டும்.

சர்வதேச அழுத்தங்களிலிருந்து விடுபடுவதற் கான ஒரு குறுங்கால நடவடிக்கையாக இன்றைய விடுதலை அமையாது உண்மையான நீதிக்கான தாக அமைவதை அரசாங்கம் உறுதிப்படுத்துவ தற்கு இச்சட்டத்தை உடனடியாக நீக்கவேண்டும். இவர்களின் விடுதலைக்கு நீதியையும் மனித உரிமைகளையும் நேசிக்கும் அனைத்துத் தரப்பு களுமே பங்களித்துள்ளன. இவ்வாறு பங்களித் ததுபோல விடுதலையாகும் அவ்வுறவுகளின் வாழ் வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் நாம் ஒன்று பட்டுச் செயல்படுவோம் - என்றுள்ளது.

(ஐ)

# உயர்தர பரீட்சை மீள்மதிப்பீட்டுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்!

கொழும்பு, ஜூன் 26

2020ஆம் ஆண்டு கல்வி பொதுத்தராதர உயர் தர பரீட்சையின் மீள் மதிப்பீட்டு விண்ணப் பங்களை இணைய வழியில் மட்டும் விண்ணப் பிக்க முடியும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ வலைத்தளம் ஊடாகவோ அல்லது பரீட்சைகள் திணைக்களத்தின் செயலி மூலமாகவோ ஜூலை 10 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

ஒரு பாடத்திற்கான விண்ணப்பத்திற்கு கட்ட ணமாக 250 ரூபாய் அறவிடப்படும். வங்கி அட்டை மூலமாகவோ இல்லது அல்லது ஒரு தபால் நிலையம் ஊடாகவோ செலுத்த வேண்டும்.

கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர், விண்ணப்பதாரர் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யலாம் என்று திணைக்களம் கூறியுள்ளது.

விண்ணப்பதாரர் பதிவின்போது அவர் வழங்கிய மொபைல் எண்ணுக்கு உறுதிப்படுத்தல் குறுந்தகவல் அனுப்பப்படும். விண்ணப்பதாரர் கள் சமர்ப்பிக்க கையொப்பம் அல்லது ஒப்புதல் பெற தேவையில்லை. நாட்டில் நிலவும் கொரோனா தொற்று நிலைமை காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## தமிழ் அரசியல்....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், ஒரு கொலைக் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்ட கைதியை விடுதலை செய்ய முடியுமானால், நீதி விசாரணைகளின்றி சிறைகளில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் ஏன் விடுதலை செய்ய முடி யாது? என்ற கேள்வியே மேலெழுந்துள்ளது.

வடக்கு-கிழக்கு யுத்தம் 2009ஆம் ஆண்டு முடிவுற்ற நிலையில், ஆயுதப் படையினரோடு நேருக்கு நேர் மோதிய பல நூற்றுக்கணக்கான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் சரண டைந்த நிலையில் புனர்வாழ்வளிக்கப் பட்டு விடுதலை செய்யப்பட்டிருந்தனர் என்பதையும் இத்தருணத்தில் சுட்டிக் காட்டவேண்டியுள்ளது. இந்நிலையில், காவலிலுள்ள ஏனைய தமிழ் அரசியல் கைதிகளும் விரைந்து விடுதலை செய் யப்படவேண்டியது இன்றியமையாததாகின்றது என்றே குறிப்பிடவேண்டியதாகின்றது.

## இப்படியும் நடக்கிறது...!

இந்த நாட்டில் என்னதான் நடக்கின்றது? ஒரு நாடு; ஒரு சட்டம் என்ற கோஷத்துடன் ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கத்தில் இப்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு சட்டம் நடைமுறையில் இருக்கின்றதா என்று கேட்காமல் இருக்க முடியவில்லை.

நண்பர் ஒருவருக்கு அண்மையில் மட்டக்களப்பில் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திருமணத் திற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னதாக அல்ல, பல மாதங் களுக்கு முன்னரே திகதி குறிக்கப்பட்டு, மட்டக்களப்பில் உள்ள பிரபல நட்சத்திர விடுதி ஒன்றில் திருமணத்திற் கான ஏற்படும் செய்யப்பட்டது.

நாட்டில் திடீரென்று பயணக்கட்டுப்பாடு அமுலுக்கு வர, திருமணத்தை இரண்டு குடும்பத்தினரும் மாத்திரம் மணமகளின் வீட்டில் நடத்துவதற்கு பொது சுகாதார பரி சோதகர் அனுமதி வழங்கினார். மணமகனின் குடும்பத்திலி ருந்து ஐவர் மாத்திரமே கொழும்பிலிருந்து மட்டக்களப் பிற்கு வருகை தந்தனர்.

அவர்கள் திருமண வீட்டுக்காக மட்டக்களப்பு போவதா கக்கூறி, கொழும்பிலுள்ள பொலிஸ் நிலையம், பொதுச் சுகாதார பரிசோதகர் போன்றவர்களிடம் அனுமதி பெற்று ஒரு மாகாணம் அல்ல மூன்று மாகாணங்களை கடந்து திருமணத்திற்கு முதல் நாள் வந்து சேர்ந்தனர்.

மட்டக்களப்பு வந்து சேர்ந்தவர்களுக்கு கிடைத்த செய்தி அதிர்ச்சி தந்தது.

வீட்டில் எக்காரணம் கொண்டும் திருமணத்தை நடத்த அனுமதிக்க முடியாது என்று பொதுசுகாரதார பரிசோதகர் உத்தரவிட்டுவிட்டார்.

அதாவது மணமகனின் வீட்டிலிருந்து வந்தவர்கள் ஐவர் மட்டுமே. அவர்களுடன் மணமகளின் இல்லத்தில் இருந்த ஐந்து பேருடன் திருமணம் செய்யவும் அனுமதி கிடைக்க வில்லை.

திருமணம் ஒன்றுக்கு திகதி குறிப்பிடப்பட்டு, அந்தத் திகதியில் அதாவது அந்த நாளில் திருமணம் நடக்கவில்லை என்றால் அது எத்தகைய மன உளைச்சலுக்கு ஆளாக்கும் என்பது தெரியாததல்ல.

திருமணத்தை நடத்துவதற்கு தேவையான சுகாதார நடைமுறைகளை கவனித்துக்கொண்டு அதற்கு அனுமதி வழங்கியிருக்கலாம்.

இந்த அவலத்தைக் கண்டு மனது குமுறிக்கொண்டிருந்த போது, தொலைக்காட்சியில் ஒரு செய்தி.

வவுனியாவில், அனுமதி அளிக்கப்பட்டதைவிட அதிக மானவர்களுடன் திருமண வீட்டை நடத்திய ஒரு குடும்பம் - மணமக்கள் உட்பட- தனிமைப்படுத்தப்பட்டனர் என்றது செய்தி.

பதினைந்து பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப் பட்டதாகவும் ஆனால், நூறு பேருக்கும் அதிகமானவர்கள் கலந்துகொண்டதால் தனிமைப்படுத்தப்பட்டதாகவும் சொல்லியது அந்தச் செய்தி.

மட்டக்களப்பில் இரண்டு குடும்பங்கள் மட்டும் அதா வது பத்து பேருடன் நடத்துவதற்கு பொது சுகாதார பரி சோதகர் அனுமதி வழங்க மறுக்கிறார். ஆனால், வவுனியா வில் 15 பேருடன் அனுமதி வழங்கப்பட்டபோதிலும் அங்கு நூறுபேருக்கும் மேல் கலந்துகொண்டதால் தனிமைப்படுத்தப்பட்டனராம்.

அப்படியெனில் வவுனியாவில் பொது சுகாதரப் பரி சோதகர் பதினைந்து பேருடன் திருமணத்தை நடத்த அனுமதி வழங்குகிறார். ஆனால், மட்டக்களப்பில் அதே தகுதிநிலையில் உள்ள அதிகாரி அனுமதி மறுக்கிறார்.

என்னதான் நடக்கிறது இந்த நாட்டில்? இப்படிக் கேட்காமல் இருக்கமுடியவில்லை. இந்த கொரோனா நெருக்கடி இன்று நாளை முடியப்போகின்ற விவகாரமல்ல. எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டும்.

இந்தப் பத்தியில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் கொள்கை பரப்பு செயலாளர் அருந்தவபலன் அண்மையில் தெரிவித்திருந்த கருத்து ஒன்று தொடர்பாக நேற்றைய தினம் எழுதியிருந்தோம்.

கூட்டமைப்புடன் தேர்தலுக்காக உடன்பாடு செய்யப் படமாட்டாது என்று அவர் தெரிவித்திருந்தார். அது கொள்கை ரீதியானதென்றால் கூட்டுக்கு சம்மதமா என்பது போல இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

அதனை படித்த அந்தக் கட்சியைச் சேர்ந்தவர் ஒருவர் ஒரு காணொலியை அனுப்பியிருந்தார். அருந்தவபாலன் கலந்துகொண்ட ஊடக சந்திப்பின் காணொலி அது.

அது குறித்து நாளை பார்ப்போம்.

- ஊர்க்குருவி

Eelanadu
25.06.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆனி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# நாகரிகமற்ற அரசியல் விவாதங்கள்

இவ்வாரம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதம் ஒன்றில், தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் அரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவருமான எம். ஏ. சுமந்திரன் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்தியிருந்தார். ஆளும் பொது ஜன பெரமுனவின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரான சுரேன் ராகவனுக்கு எதிராகவே சுமந்திரன் இவ்வாறான வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்தியிருந்தார். ஒருகட்டத்தில் ஆவேசப்பட்ட சுமந்திரன், அரசாங்கத்தின் காலை நக்கிக்கொண்டிருப்பவர் என்று சுரேன் இராகவனை குறிப்பிட்டிருந்தார். அதேபோன்று சபாநாயகரிடம், 'அந்த நாயை குரைக்காமல் இருக்கச் சொல்லுங்கள்' என்றும் குறிப்பிட்டிருந்தார். இதுபோன்ற வார்த்தை பிரயோகங்களை சுமந்திரன் இதற்கு முன்னர் ஒருபோதுமே பயன்படுத்தியதில்லை.

சுரேன் இராகவனும், சுமந்திரனும் முன்னர் நண்பர்களாக இருந்தவர்கள். சுரேன் இராகவன், நல்லாட்சி அரசாங்கம் என்று அழைக்கப்பட்ட ரணில் – மைத்திரி காலத்தில் அரசியலுக்குள் நுழைந்த ஒருவர். மைத்திரிபால சிறிசேனவினால் வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டபோது, வடக்கிற்கு செல்வதற்கு முன்னர், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் ஆசிர்வாதத்தை பெற்றுக்கொண்டார். இந்த சந்திப்பின்போது சுமந்திரனும் உடனிருந்தார். 'டான்' தொலைகாட்சிக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில், சம்பந்தன் ஆசியாவிலேயே சிறந்த ஒரு தலைவர் என்று சுரேன் குறிப்பிட்டிருந்தார். மைத்திரியின் ஊடாக, அரசியலுக்கு அறிமுகமான சுரேன் இராகவன் பின்னர், ராஜபக்ஷக்களின் ஆளும் பொதுஜன பெரமுன அரசாங்கத்துடன் இணைந்து கொண்டார்.

ஆளும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒருவர், அந்த அரசாங்கத்தின்மீதான விசுவாசத்தையே காண்பிப்பார். அப்படித்தான் காண்பிக்கவும் வேண்டும். சுரேன் இராகவன் போன்றவர்களை தேசியப் பட்டியல்மூலம் நியமித்ததன் நோக்கமே, தமிழ் மக்களின் ஆதரவை பெறுவதற்கு அவர்கள் பணிபுரிய வேண்டும் என்பதுதான். சுரேன் இராகவன்போன்ற ஒருவரால் அது முடியுமா என்பது வேறுவிடயம். ஆனால், ஒரு தமிழரை நோக்கி பிறிதொரு தமிழர் 'நீ அரசாங்கத்தின் காலை நக்கிக்கொண்டு இருக்கிறாய்' என்று கூறும்போது, தமிழர்களின் அரசியல் இயலாமைதான் சிங்களவர்களுக்கு முன்னால் அம்பலமாகிக் கொண்டிருக்கின்றது.

என்னதான் அரசியல் எதிராளியாக இருந்தாலும்கூட, பண்பான வார்த்தைகளின் ஊடாகவே விவாதங்களை முன்வைக்கவேண்டும். அதிலும் சுமந்திரன்போன்ற ஒருவர், இவ்வாறான வார்த்தைகளை பிரயோகிப்பது அவரின் அரசியல் இயலாமையையே அம்பலப்படுத்துகின்றது. சுமந்திரன் அரசியல் ரீதியில் மோசமான தோல்வியை சந்தித்திருக்கும் ஒருவர். சுமந்திரன் கூறிய எந்தவொரு விடயமும் அரசியலில் சாத்தியப்படவில்லை. அரசியல் தீர்வு கிடைக்காவிட்டால், அரசியலிலிருந்து விலகும் எண்ணம் இருப்பதாகக்கூட, சுமந்திரன் ஒரு முறை நேர்காணல் ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், கடந்த ஆட்சிக் காலத்தில் சுமந்திரனோடு கூட இருந்தவர்கள் அவர்மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும்போது, அதனை சுமந்திரனால் எதிர்கொள்ளமுடியாமல் இருக்கின்றது. இவ்வாறான சூழ்நிலைகளில் அவர் உணர்ச்சிவசப்படுகின்றார். சுரேன் இராகவன் விடயத்திலும் இதுதான் நடந்திருக்கின்றது. ஆனாலும், பொறுப்பு வாய்ந்த அரசியல் பிரதிநிதிகளுக்கு நாவடக்கம் முக்கியம். அதிலும், சுமந்திரன் எதிர்காலத்தில் தமிழர் அரசியலில் முக்கியமான இடம் ஒன்றிற்கு வரக்கூடியவர் என்றும் சிலர் நம்புகின்றனர்.

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை!

- அலசுவது **இராஜதந்திரி** -

இலங்கையில் பௌத்த மதம் அறிமுகப்படுத்தப்பட்ட தினமே பொசன் பண்டிகையாக இலங்கையில் அனுஷ்டிக்கப்படுகின்றது. கி.மு. 247ஆம் நூற்றாண்டில் இலங்கையில் தேவநம்பியதீசன் மன்னரது காலத்திலேயே பௌத்த மதம் இந்தியாவின் அசோக சக்கரவர்த்தியின் புதல்வி சங்கமித்தை மற்றும் அவரின் சகோதரர் மஹிந்த ஆகியோரால் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அசோக மன்னரின் புதல்வி சங்கமித்தையும், அவரது சகோதரர் மஹிந்தவும் புத்த பகவான் ஞானோதயம்பெற்ற புனித அரச மரத்தின் கிளையோடு காங்கேசன்துறையில் பாய்மர தோணி மூலமாக வந்திறங்கியிருந்தனர்.

அச்சமயம், காங்கேசன்துறை, ஜம்புகோள பட்டினம் என்றே அழைக்கப்பட்டிருந்தது.

சங்கமித்தையும், அவரது சகோதரர் மஹிந்தவும் காங்கேசன்துறையில் வந்திறங்கி, அநுராதபுரம் சென்று அங்கிருந்து மிஹிந்தலை நோக்கிச்சென்றபோது அப்பிரதேசத்திலுள்ள காட்டுப்பகுதியில் மன்னர் தேவநம்பியதீசன் மான் வேட்டையிலிறங்கியிருந்தார். அப்போது, மன்னர் தேவநம்பியதீசன் அவர்களிடம் தன்னை அறிமுகப்படுத்தியபோது, பௌத்த தர்மத்தை சங்கமித்தையும் மஹிந்தவும் மன்னருக்குப் போதித்திருந்தனர்.

**இலங்கையில் பௌத்தம்**

தேவநம்பியதீசன் பௌத்த மதத்தை தழுவியபோது, அம்மன்னன் உட்பட அவனது குடிமக்கள் அனைவரும் இயற்கையையே பெரிதும் வழிபட்டுவந்தனர். பௌத்தத்தை தழுவிய மன்னர் தேவநம்பியதீசன், சங்கமித்தையும் அவரது சகோதரர் மஹிந்தவும் தம்மோடு கொண்டுவந்திருந்த, புத்தர் ஞானம் பெற்ற வெள்ளரசு மரத்தின் கிளையை அநுராதபுரத்தில் நாட்டினார். இந்த வெள்ளரசு மரமே இலங்கையில் மிகப்பழமையான புனித விருட்சமாக கருதப்படுகின்றது.


எனவே, இலங்கைக்கு புனித வெள்ளரசு மரத்தோடு பௌத்த மதம் கொண்டுவரப்பட்ட பௌர்ணமி தினமே பொசன் பண்டிகை தினமாக இலங்கையில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

**தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை**

நேற்றைய பொசன் தினத்திலேயே தமிழ் அரசியல் கைதிகள் பதினாறு பேர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால், காருண்ய அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர். இதற்கு முன்பதாக, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இருதினங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனைத்தொடர்ந்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பொது மன்னிப்பின் அடிப்படையில் பதினாறு தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்துள்ளார்.

இருந்தபோதிலும், மேலும் பல தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டியவர்களாக இருக்கின்றனர். இதுவிடயத்தில் அரசு மேலும் நல்லெண்ணத்தை வெளியிடவேண்டியது அவசியமானதாகின்றது.



**துமிந்த சில்வாவின் விடுதலை**

இதேவேளை, பொசன் தினத்தை முன்னிட்டு கொழும்பு பாராளுமன்ற உறுப்பினரான துமிந்த சில்வாவும் ஜனாதிபதியினால் காருண்ய அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். மற்றொரு பாராளுமன்ற உறுப்பினரான பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவை பேரணியொன்றின்போது சுட்டுக்கொன்றமை தொடர்பாக 2016ஆம் ஆண்டு இலங்கை உயர் நீதிமன்றினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், வெலிக்கடை சிறைச்சாலையில் கடந்த ஐந்து வருடகாலமாக சிறைத்தண்டனை அனுபவித்துவந்தவர் இவர். இலங்கையில் மரணதண்டனை அமுலில் இல்லாத காரணத்தினால் துமிந்த சில்வா ஆயுள் தண்டனையை அனுபவித்து வந்தார்.


**பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா**

துமிந்த சில்வாவினால் கொலையுண்ட பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் புதல்வி ஹிருணிகா தற்போது பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றார் என்பது குறிப்பித்தக்கது.

துமிந்த சில்வா உயர் நீதிமன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்ட நிலையில் மரணதண்டனை விதிக்கப்பட்டு ஐந்து வருடங்களின் பின்னர் விடுதலையாகியுள்ளார். இவ்விடுதலை, இலங்கையின் நீதித்துறையை கொச்சைப்படுத்துவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

எனவே, ஒருபுறம் வருடக்கணக்கில் வழக்கு விசாரணைகளின்றி சிறைவைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளில் குறிப்பிட்ட ஒரு சிலரையே அரச நேற்று முன்தினம் விடுதலை செய்துள்ளது. மறுபுறத்தே, உயர் நீதிமன்றினால் ஒரு கொலைக்குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டு ஆயுள் தண்டனை பெற்றுவந்த துமிந்த சில்வா அரசினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு

ஜுன் - 25 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம் - ஆனி 11
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : பிரதமை




25.06.2021

**மேடம்**
நெருக்கமானவர்கள் உங்களுக்கு நன்மை அளிப்பார்கள். பணியிடத்திலும், வீட்டிலும் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டு. கணவன், மனைவி இடையே இருந்த சகஜ நிலை நீடிக்கும்.

**இடபம்**
பிள்ளைகள் மூலம் வரும் செய்தி மகிழ்ச்சியை கொடுக்கும். கற்பனையான காரணங்களால் மனக் கவலை உண்டாகும். கல்வி சம்பந்தமான முயற்சிகளில் உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்**
குடும்பத்திற்கான செலவு கூடும். இயல்பு நிலை மாறும். சம்பந்தமே இல்லாதவர்கள் மீது திடீர் கோபம் வேண்டாம். முயற்சிகளுக்கு ஏற்றபடி இன்று நற்பலன்கள் கிடைக்கும்.

**கடகம்**
யாரிடமும் தன்மையாகச் செயல்படுவது, பேசுவது நல்லது. எதிர்ப்புக் காட்டியவர்களுடன் நல்லுறவு ஏற்படும். பேச்சினால் நன்மை வரும். பிள்ளைகள் மகிழ்ச்சியான செய்திகள் தருவார்கள்.

**சிம்மம்**
பணி, தொழில் சார்ந்த விஷயங்களில் சாதனை செய்வீர்கள். கலைத்துறையினருக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கும். எதிர்பார்த்த அளவுக்கு நிதி நிலை உயர வாய்ப்புகள் குறைவு.

**கன்னி**
மற்றவர்களுக்காக விட்டுக்கொடுத்துப் போக நேரலாம். இயந்திரப் பணியாளர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். சோம்பலைத் தவிர்க்க வேண்டும். இளைஞர்களின் திறமை வளரும்.

**துலாம்**
மகிழ்ச்சியான நிகழ்ச்சிகள் நடைபெறும். தடை விலகும். இளமைக்காலத் தொடர்புகளைப் புதுப்பித்து மகிழ்வீர்கள். வெளியூரில் உள்ள உறவுகள் மூலம் நல்ல செய்தி வரும்.

**விருட்சிகம்**
புதிய பொருட்களின் சேர்க்கை காரணமாகச் செலவு கூடும். நல்ல வாய்ப்பு கிடைக்கும். பக்தி உணர்வு கொள்வீர்கள். தொழிலில் இருந்த போட்டிகள் விலகி நிம்மதி கிடைக்கும்.

**தனுசு**
பணி சம்பந்தமான முயற்சிகளில் நல்ல முன்னேற்றம் காண்பீர்கள். ஒரு சின்ன விஷயத்திற்காக கூட அலைய வேண்டி இருக்கும். புதிய பொருட்கள் வாங்குவதைத் தாமதிப்பது நல்லது.

**மகரம்**
பயணங்களை தவிர்க்கப் பாருங்கள். பேச்சினால் நன்மை வரும். வெளிநாட்டில் உள்ள பிள்ளைகளிடம் இருந்து நற்செய்தி வரும். கொடுக்கல் வாங்கல் போன்றவற்றைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்**
பணப்பற்றாக்குறையால் கைமாற்று வாங்க வேண்டி வரும். பிறரிடம் மனம்விட்டுப் பேசுவீர்கள். உங்களின் தனித்திறமை கூடும். கவலை நீங்கும். மற்றவர்களிடம் கனிவாகப் பழகுவீர்கள்.

**மீனம்**
வெற்றி காரணமாக மகிழ்ச்சியில் துள்ளுவீர்கள். இது வரை இருந்து வந்த மனஸ்தாபங்கள் நீங்கும். பலகால எதிர்பார்ப்புகள் நிறைவேறும் முயற்சியைக் கூட்டுங்கள்.

# நான் அண்ணாவின் அரசியல் வாரிசு கருணாநிதியின் கொள்கை வாரிசு!

## சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஜுன் 25

**தி.மு.க. யாராலும் அடக்க முடியாத யானை. நான்கு கால்கள் தான் யானையின் பலம் சமூக நீதி, சுயமரியாதை, மாநில உரிமை, மொழிப்பற்று ஆகியவை தி.மு.கவின் கால்கள் என முதலமைச்சர் மு.க ஸ்டாலின் கூறினார்.**



சட்டசபையில் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் நேற்று உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:-

“நீதிக்கட்சியின் தொடர்ச்சி பேரறிஞர் அண்ணா, அண்ணாவின் தொடர்ச்சி கலைஞர், கலைஞரின் தொடர்ச்சி நான். அண்ணாவின் அரசியல் வாரிசு, கலைஞரின் கொள்கை வாரிசு நான். பொறுத்தார் பூமியாழ்வார் என்பது பழமொழி, நாங்கள் பத்தாண்டுகள் பொறுத்திருந்து ஆட்சிக்கு வந்துள்ளோம், கொடுத்த வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம், துளி அளவும் சந்தேகம் வேண்டாம். தி.மு.க. யாராலும் அடக்க முடியாத யானை் நான்கு கால்கள் தான் யானையின் பலம் சமூக நீதி, சுயமரியாதை, மாநில உரிமை, மொழிப்பற்று ஆகியவை தி.மு.கவின் கால்கள்.

கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொள்ளக் கூடாது என எடப்பாடி பழனிசாமியின் கையை யாரும் கட்டி வைக்கவில்லை; நடுவுல கொஞ்சம் பக்கத்தை காணோம் என்பதை போல பெப்ரவரி முதல் மே மாதம் வரை அவர் பணிகள் செய்ய மறந்துவிட்டார்.

கடந்த ஆட்சியிடம் கொரோனா தொற்று குறித்து விவாதிக்க அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட சொன்னேன் ஏற்கவில்லை ஆட்சிக்கு வரப் போவதில்லை என அலட்சியமாக இருந்ததால் தான் கொரோனா தொற்று அதிகரித்தது. தமிழகத்தில் போர்கால அடிப்படை நடவடிக்கைகளால், கொரோனா தொற்று 7 ஆயிரமாக குறைந்துள்ளது. கொரோனா 3ஆவது அலை வந்தாலும், அதை எதிர்க்கொள்ள தமிழக அரசு தயாராக உள்ளது” என்றார்.

---

# உள்ளூராட்சி தேர்தலுக்கு தயாராகும் தி.மு.க.! அவசர ஆலோசனை கூட்டத்துக்கு அழைப்பு

சென்னை, ஜுன், 25

தமிழகம் முழுவதும் 9 மாவட்டங்களுக்கு உள்ளாட்சி தேர்தல் நடத்த உயர் நீதிமன்ற உத்தரவிட்ட நிலையில் உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக ஆலோசனை நடத்த இன்று தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெறும் என்று தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்.

உள்ளாட்சி தேர்தலுக்கு தயாராவது குறித்து ஆலோசிக்க திமுக மாவட்டச் செயலாளர் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படாத 9 மாவட்டங்களில் செப்டம்பர் 15 ஆம் திகதிக்குள் தேர்தல் நடத்த உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அதன்படி உள்ளாட்சி தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏற்கனவே அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியிருந்தார்.

விழுப்புரம், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், நெல்லை உள்ளிட்ட 9 மாவட்டங்களில் உள்ளாட்சி தேர்தல் நடத்த வேண்டியுள்ளது. இந்நிலையில் நாளை மறுநாள் தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெறும் என்று தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான முக.ஸ்டாலின் தலைமையில் மாலை 5 மணிக்கு நடைபெறும் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக ஆலோசிக்கப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார். மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் அனைவரும் தவறாமல் கலந்துக்கொள்ள வேண்டும் என்று துரைமுருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

# தமிழகத்துக்கு பரவியது ‘டெல்டா பிளஸ்’

சென்னை, ஜுன் 25

தமிழ்நாட்டில் ஒருவருக்கு முதன் முறையாக கொரோனா ‘டெல்டா பிளஸ்’ திரிபு கண்டறியப்பட்டதாக தமிழக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொடர்ந்து மாற்றமடைந்து பல்வேறு திரிபுகளாக உருவெடுத்து வரும் நிலையில், இந்தியாவில் ஏற்பட்ட திரிபுக்கு டெல்டா என்று பெயர் சூட்டப்பட்டது. இந்தத் திரிபு மீண்டும் மாற்றம் அடைந்தால் அது டெல்டா பிளஸ் என அழைக்கப்படுகிறது.

இந்த டெல்டா பிளஸ் அல்லது AY.1 என அழைக்கப்படும் திரிபு, எளிதாக பரவக்கூடியது, நுரையீரல் அணுக்களுடன் எளிதாக கலப்பது, எதிர்ப்பணு ஆற்றல் சிகிச்சைக்கு எதிர்வினையாற்றுவது, வைரஸை அழிக்கக் கூடிய எதிர்ப்பணுக்களை மீறி செயலாற்றுவது போன்ற தன்மைகளை கொண்டிருப்பதாக இந்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துளளது.

இந்த நிலையில், இந்தத் திரிபால் தமிழ்நாட்டில் ஒருவர் பாதிக்கப்பட்டிருப்பதாக தமிழக சுகாதாரத் துறை செயலர் ஜெ. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார். “இந்தத் திரிபால் பாதிக்கப்பட்ட பெண் கடந்த மே மாதம் கொரோனாவால் பாதிக்கப்பட்டார். அவரிடம் இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகள் ஆய்வுக்காக அனுப்பப்பட்டன. அதில், அவர் டெல்டா பிளஸ் திரிபால் பாதிக்கப்பட்டது தெரிய வந்துள்ளது. ஆனால், அவர் முழுமையாகக் குணமடைந்து விட்டார்” என்று ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இந்த டெல்டா பிளஸ் திரிபால் இந்தியாவில் இதுவரை 40 பேர் வரை பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

# அதிகாரத்தை ஜனாதிபதி துஷ்பிரயோகம் செய்கிறார்

## துமிந்தவின் விடுதலைக்கு ஐக்கிய மக்கள் சக்தி கண்டனம்

**கொழும்பு, ஜூன் 25**

**"துமிந்த சில்வாவுக்கு மன்னிப்பளித்துள்ளமை போன்ற சம்பவங்கள் பழங்குடி நிலப்பிரபுத்துவ அடிமைத்தனத்தின் கீழுள்ள ஓர் ஆட்சியில் மாத்திரமே நடக்க முடியும். அரசமைப்பினூடாக வழங்கப்பட்ட அதிகாரத்தை ஜனாதிபதி துஷ்பிரயோகம் செய்கிறார்."**

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

சர்வதேச அமைப்புகள் ஏற்கனவே இலங்கையில் மனித உரிமைகள் குறித்து கேள்வி எழுப்பி வரும் நிலையில், துமிந்த சில்வா விடுதலை செய்யப்பட்டுள்ளமையானது நாளுக்கு நாள் இலங்கை தொடர்பில் சர்வதேச அபிமானத்தை மேலும் மோசமாக்கும் செயல்பாடாக அமையும். எனவே, இந்த முடிவை உடனடியாக வாபஸ் பெற்று, சட்டத்தின் இறையாண்மையையும் சுதந்திரத்தையும், நீதிபதிகளின் கௌரவத்தையும் பாதுகாக்குமாறு ஜனாதிபதியை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார அறிக்கையொன்றை வெளியிட்டு இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது :

ஒரு நாட்டில் நீதித்துறையானது ஜனநாயக நிர்வாகத்தின் மிக முக்கியமான காரணியாக கருதப்படுகிறது. சட்டத்தின் இறையாண்மை மட்டுமல்லாது, இலங்கையின் சுதந்திரமும் இன்று சவாலுக்குட்பட்டுள்ளது என்பது துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட சிறப்பு ஜனாதிபதி மன்னிப்பிலிருந்து தெளிவாகிறது.

ஜனாதிபதி கோட்டாபய அவர் மாத்திரமே அரசாங்கம் என்ற எண்ணப்பாட்டிலேயே செயல்படுகிறார் என்று தெரிகிறது. அவரது நடவடிக்கைகள் பாராளுமன்றமும் நீதித்துறையும் அவர் விரும்பியபடி செயல்படவேண்டும் என்பதைக் காட்டுகிறது.

இது நாட்டின் ஜனநாயக ஆட்சிக்கு கடுமையான அச்சுறுத்தலாகும். சர்வதேச அமைப்புகள் ஏற்கனவே இலங்கையில் மனித உரிமைகள் குறித்து கேள்வி எழுப்பி வருகின்றன. ஐரோப்பிய ஒன்றியத்தின் சமீபத்திய தீர்மானம் நாட்டின் எதிர்கால பொருளாதாரத்திற்கு ஒரு பெரிய சவாலாக அமைந்துள்ளது.

அரசியல் பழிவாங்கலுக்கான ஜனாதிபதி ஆணைக்குழு எனும் அபகீர்த்தி ஆணைக்குவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து நீதிமன்றம் வழங்கிய முடிவுகளை மாற்றியமைக்க சட்டமா அதிபருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற முடிவுகளை அமைச்சரவை மூலம் மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சட்டம் அல்லது நாகரிகம் அற்ற இடத்திற்கு நாடு கொண்டு செல்லப்படுகின்றமை இத்தகைய நடவடிக்கைகளிலிருந்து தெளிவாகிறது.

உயர்நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் உட்பட ஐந்து நீதிபதிகள் கொண்ட குழுவால் உறுதிப்படுத்தப்பட்ட மூன்று பேர் கொண்ட உயர்நீதிமன்றம் வழங்கிய தண்டனை நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி மாற்றப்பட்டால், அது நாட்டில் நல்லாட்சி குறித்த கேள்வியை எழுப்புகிறது.

இந்த சம்பவம் மிகச் சிறப்பாக திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது என்பது இரகசியமல்ல. அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஆணைக் குழுவுடன் எந்த தொடர்பும் இல்லாத துமிந்த சில்வாவின் வழக்கை ஆணைக்குழுவின் இறுதி சந்தர்ப்பத்தில் ஏற்றுக் கொள்ளவும், இதுபோன்ற தீவிரமான முடிவை அரசியல் பழிவாங்கலில் பதிவு செய்தமையும், இந்த முடிவை எடுத்த அப்போதைய பிரதம நீதியரசர் மற்றும் பிற நீதிபதிகளுக்கு இது ஓர் அவமானமான செயலாகும்.

துமிந்த சில்வாவுக்கு மன்னிப்பு கோரும் விதமாக பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களைப் பெறுவதும் இந்த வெட்கமற்ற முடிவுக்கான பின்னணி அமைப்பாகும் என்பது தெளிவாகிறது. நாளுக்கு நாள் நாட்டின் சர்வதேச அபிமானத்தை மோசமாக்கி வரும் அரசாங்கம், இந்த நடவடிக்கையின் மூலம் தாய்நாட்டை நாகரிக உலகத்திலிருந்து மேலும் தனிமைப்படுத்தும்.

சட்டத்தை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் நாட்டு மக்கள் அதிகாரத்தை வழங்கவில்லை. துமிந்த சில்வா மீது சாற்றப்பட்டது கொலைக் குற்றச்சாட்டாகும். அந்த கொலையில் ஒரு பாதிக்கப்பட்ட தரப்பும் உள்ளது.

அரசாங்கம் தனது அரசியல் சகாவை மன்னித்தது, பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்டத்தால் வழங்கப்பட்ட நீதியை இழக்கச் செய்வதாகும். இத்தகைய சம்பவங்கள் பழங்குடி நிலப்பிரபுத்துவ அடிமைத்தனத்தின் கீழுள்ள ஓர் ஆட்சியில் மாத்திரமே நடக்க முடியும். அரசியலமைப்பால் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை ஜனாதிபதி துஷ்பிரயோகம் செய்வதை ஐக்கிய மக்கள் சக்தி கடுமையாக கண்டிக்கிறது-என்றுள்ளது.

### சிலாவத்துறை பகுதியில்

## 1,363 கிலோ உலர்ந்த மஞ்சள் மூடைகளுடன் மூவர் கைது!

மன்னார், ஜூன் 25

முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சிலாவத்துறை கடற்கரைப் பகுதியில் வைத்து நேற்று வியாழக்கிழமை அதிகாலை 1,363 கிலோ உலர்ந்த மஞ்சள் மூடைகள் மீட்கப்பட்டதோடு, அவற்றை சட்ட விரோதமான முறையில் கொண்டு வந்தார்கள் என்ற சந்தேகத்தில் 3 நபர்களை கடற்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து கைது செய்துள்ளனர்.

சிலாவத்துறை பகுதியில் உள்ள அல்லிராணிக் கோட்டைக்கு மேற்கு பகுதியில் உள்ள கடற்பரப்பில் வைத்து சிலாவத்துறை பொலிஸார் மற்றும் கடற்படையினர் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது 26 மூடைகளில் பொதி செய்யப்பட்டிருந்த 1,363 கிலோ உலர்ந்த மஞ்சள் கட்டி மூடைகளை கைப்பற்றப்பட்டன.

சட்ட விரோதமான முறையில் அவற்றை கொண்டு வந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 3 பேரை பொலிஸார் கைது செய்துள்ளதோடு, அவர்கள் பயன்படுத்திய படகு மற்றும் படகின் வெளியிணைப்பு இயந்திரமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் மேலதிக விசாரணைகளை சிலாவத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கைது செய்யப்பட்டால் பிணை வழங்கப்படாது

கொழும்பு, ஜூன் 25

நாட்டில் தற்போது பயணத்தடை அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டு கைது செய்யப்படுபவர்களுக்கு பொலிஸ் பிணை வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதனை நேற்று தெரிவித்தார்.

கைது செய்யப்படுபவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

## வவுனியாவில் 8 சிறுவர்கள் உட்பட 25 பேருக்கு கொரோனா தொற்று

வவுனியா, ஜூன் 25

வவுனியாவில் 8 சிறுவர்கள் உட்பட 25 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள், வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் முடிவுகள் வெளியாகின.

அதில், மதவுவைத்தகுளம் பகுதியில் ஒருவருக்கும், நந்திமித்திரிகம பகுதியில் ஒருவருக்கும், தரணிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், சிவபுரம் பகுதியில் ஒருவருக்கும், கற்குளம் பகுதியில் நான்கு பேருக்கும், பெரியகோமரசன்குளம் பகுதியில் நான்கு பேருக்கும், ரம்பாவ பகுதியில் ஒருவருக்கும், நெடுங்கேணி பகுதியில் ஆறு பேருக்கும், மறவன்குளம் பகுதியில் இருவருக்கும், மணியர்குளம் பகுதியில் மூவருக்கும், சகாயமாதாபுரம் பகுதியில் ஒருவருக்கும் என 25 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## ஜனாதிபதி இன்று நாட்டு மக்களுக்கு விஷேட உரை!



கொழும்பு, ஜூன் 25

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று இரவு 8.30 மணியளவில் நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஜனாதிபதி ஊடக பிரிவு அறிவித்துள்ளது.

# இன்று முதல் ரயில் சேவை

கொழும்பு, ஜூன் 25

ரயில் போக்குவரத்து சேவை மாகாணத்துக்குள் மாத்திரம் இன்று முதல் முன்னெடுக்கப்படும். சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களை கருத்திற்கொண்டு பிரதான ரயில் பாதையில் 4 ரயில்கள் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்படும்.

ஆகவே, பயணிகள் ரயிலில் நெருக்கமாக பயணம் செய்வதை இயலுமான அளவில் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என ரயில் திணைக்கள பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன தெரிவித்தார்.

ரயில் போக்குவரத்து சேவை குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கோவிட்-19 வைரஸ் தாக்கத்தை கருத்திற் கொண்டு நாடு தழுவிய ரீதியில் அமுலில் இருந்த பயணத்தடை இன்று காலை தளர்த்தப்படுகிறது. மாகாணத்துக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ரயில் போக்குவரத்து சேவை இடம்பெறும்.

ரயில்கள் மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தினால் பொது பயணிகள் அசௌகரியங்களை எதிர்க் கொண்டுள்ளமை அவதானிக்க முடிகிறது.

கடந்த மூன்று நாட்களும் அத்தியாவசிய தேவைக்காக மாத்திரம் ரயில்கள் சேவையில் ஈடுப்படுத்தப்பட்டன. ரயில் சேவையில் சமூக இடைவெளியை பேணுவது சாத்தியமற்றதாகவே காணப்படுகிறது.

பொது பயணிகள் நலனை கருத்திற்கொண்டு ரயில் சேவை அதிகரிக்கப்பட்டுள்ளன. இதற்மைய பிரதான ரயில் பாதையில் மேலதிகமாக 4 ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

இன்று முதல் பிரதான ரயில் பாதையில் 10 ரயில் சேவையும், கரையோர ரயில் பாதையில் 5 ரயில் சேவையும், களனி வழி பாதையில் 5 ரயில் சேவையும், புத்தளம் வழி பாதையில் 4 ரயில் சேவையும் இடம்பெறும்.

ரயில் சேவையை பயன்படுத்தும் பொது பயணிகள் தங்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப் படுத்திக்கொள்ளும் வகையில் பொறுப்புடன் செயற்பட வேண்டும். ஒரு சில பயணிகள் பொறுப்பற்ற வகையில் செயற்படுதை அவதானிக்க முடிகிறது-என்றார்.

## முல்லைத்தீவில் இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, ஜூன் 25

முல்லைத்தீவு-ஆறுமுகத்தான்குளம் கிராமத்தில் நேற்றுக் காலை இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஆறுமுகத்தான்குளம் கிராமத்தைச் சேர்ந்த 26 வயதுடைய குடும்பஸ்தரே, இவ்வாறு வெற்று காணியில் உள்ள வேப்பமரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக, இவர் உயிரை மாய்த்திருக்கலாம் என முல்லைத்தீவு பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.




# துமிந்த விடுதலைக்கு அமெரிக்கா அதிருப்தி!

கொழும்பு, ஜூன் 25

கொலைக்குற்றத்துக்கு உள்ளாகி மரண தண்டனை பெற்று வந்த நிலையில் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் அம்மையார், ருவிட்டரில் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

'தமிழ் கைதிகளின் ஆரம்ப விடுதலையை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் 2018 ஆம் ஆண்டில் உயர்நீதிமன்றம் உறுதி செய்த தீர்ப்புக்கெதிராக, இப்போது துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பு சட்டத்தின் ஆட்சியை குறைமதிப்புக்கு உட்படுத்துகிறது.

அரசாங்கத்தின் பொறுப்புணர்வு மற்றும் நீதிக்கான சம அணுகல் ஆகியவை ஐ.நா. கோட்பாடுகளுக்கு அடிப்படையானவையாகும்' என்றும் அவர் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

# சிதைந்த தேசத்தை கட்டியெழுப்புவதே ரணிலின் நோக்கம்!

## ருவான் விஜவர்த்தன தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 25**



**சிதைந்த தேசத்தை கட்டியெழுப்புவதே ஐக்கியத் தேசியக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்ரமசிங்கவின் நோக்கமென கட்சியின் துணைத் தலைவர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்தார்.**

கட்சி தலைமையகத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் ஒரு தேசிய கொள்கையை கொண்டு வரமுயற்சிக்க அவரை பாராளுமன்றத் துக்கு அனுப்பியுள்ளோம்.

இது ஐக்கியத் தேசியக் கட்சி மற்றும் முழு நாட்டிற்கும் ஒரு குறிப்பிடத்தக்க நாள்- என்றார்.

இதேவேளை, ரணில் விக்ரமசிங்கவை எதிர்க்கட்சித் தலைவராக்குவதைவிட இந்த நாட்டின் ஜனாதிபதியாக்குவதே தமது கட்சியின் கவனம் என கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

# யாழ். மாவட்டத்தில் 50 ஆயிரம் பேருக்கு 2ஆவது டோஸ் வழங்கும் பணி திங்களன்று

கொழும்பு, ஜூன் 25

யாழ். மாவட்டத்தில் முதல் கட்டமாக சினோபார்ம் கோவிட்-19 தடுப்பூசி பெற்ற 50 ஆயிரம் பேருக்கு இரண்டாவது டோஸ் வழங்கும் பணி வரும் திங்கட்கிழமை ஆரம்பாகவுள்ளது.

இந்த தகவலை பிரதமரின் இணைப்புச் செயலாளர் வெளியிட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்துக்கு கடந்த மே மாத இறுதியில் 50 ஆயிரம் பொதுமக்களுக்கு தெரிவு செய்யப்பட்ட கிராம அலுவலர் பிரிவு ரீதியில் சினோபார்ம் தடுப்பூசி வழங்கப்பட்டது.

அவ்வாறு முதல் டோஸ் தடுப்பூசியை பெற்ற அனைவருக்கும் இரண்டாவது டோஸை வழங்கும் பணி எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என பிரதமரின் இணைப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதற்காக சுகாதார அமைச்சினால் 50 ஆயிரம் சினோபார்ம் தடுப்பூசி டோஸ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# மரண தண்டனை கைதிகள் உண்ணாவிரத போராட்டம்

கொழும்பு, ஜூன் 25

சிறைச்சாலைகளில் உள்ள மரண தண்டனைக் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் துமிந்த சில்வா விடுதலை செய்யப்பட்டதைப் போன்று தங்களுக்கும் விடுதலை வழங்கவேண்டுமெனவும் அல்லது மரண தண்டனையை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமெனவும் கோரி இவ்வாறு கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

# தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் இன்னொரு சிங்கத்துக்கும் கொரோனா

கொழும்பு, ஜூன் 25

தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் கொரோனா தொற்றுறுதியான 'தோர்' என்ற ஆண் சிங்கம் வசித்து வந்த பகுதியில் இருந்த 'ஷீனா' என்ற பெண் சிங்கத்துக்கும் கோவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

ராகமை மருத்துவ பீடத்திற்கு அனுப்பப்பட்ட 12 வயதான குறித்த பெண் சிங்கத்தின் மாதிரிகள் கோவிட் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது, குறித்த சிங்கத்துக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டதாக அரச கால்நடை மருத்துவ சங்கத்தின் செயலாளர் நுவன் ஹேவாகமகே தெரிவித்தார்.

அத்துடன் தொற்று உறுதியான சிங்கத்துக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் முன்னதாக கோவிட் தொற்றுக்குள்ளான தோர் தற்போது குணமடைந்து வருவதாகவும் மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# மணல் கொள்ளையர்கள் இடையே வாள்வெட்டு!

## ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணத்தில் மண் கொள்ளையர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாள்வெட்டு மோதலில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம் கெற்பேலி பகுதியில் நேற்று வியாழக்கிழமை மதியம் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

சட்டவிரோதமான முறையில் மணல் கொள்ளையில் ஈடுபட்ட இரு குழுக்களுக்கு இடையில் மணல் ஏற்றும் இடத்தில் வாய் தர்க்கம் ஏற்பட்டு அது வாள்வெட்டில் முடிவடைந்துள்ளது.

வாள்வெட்டுக்கு இலக்காகிய 50 வயதுடைய நபர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# தாய்லாந்து தூதரகத்திற்கு காணி போலி ஆவணம் மூலம் விற்பனை

## சட்டத்தரணி ஒருவர் உட்பட மூவர் கைது!

கொழும்பு, ஜூன் 25

கொழும்பிலுள்ள தாய்லாந்து தூதரகத்திற்கு சொந்தமான சுமார் 50 கோடி ரூபாய் பெறுமதியுடைய காணியை போலி ஆவணங்களை தயாரித்து விற்பனை செய்தமை தொடர்பில் சட்டத்தரணி ஒருவர் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பதில் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன இதனை தெரிவித்தார்.

கொழும்பு -7, டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர மாவத்தையில் அமைந்துள்ள தாய்லாந்து தூதரகத்துக்கு சொந்தமான 20 பேர்ச் (2 பரப்பு) காணியை போலி ஆவணங்களை தயாரித்து விற்பனை செய்ததாக முறையிடப்பட்டதை தொடர்ந்து, குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளினால் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



காணி தொடர்பான போலி ஆவணங்களை தயாரித்தமை தொடர்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சட்டத்தரணி ஒருவரை குற்றப்புலனாய்வு பிரிவினர் கைது செய்யதுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளில் காணியை விற்பனை செய்தாரெனக் கூறப்படும் நபரையும், அதனை விலைக்கு வாங்கிய நபரையும் குற்றப்புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் கைது செய்து, நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

சுமார் 50 கோடி ரூபாய் பெறுமதியுடைய காணியே சந்தேக நபர்களால் மோசடி செய்யப்பட்டதாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

விசாரணை தொடர்பான தகவல்கள் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டன. அதன் பின்னர் போலி பத்திரத்தை சான்றளித்த சட்டத் தரணியை கைது செய்ய சி.ஐ.டிக்கு அறிவுறுத்தப்பட்டது.

சி.ஐ.டியினர் நேற்று சட்டத்தரணியை கைது செய்தனர். அவர் இன்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படுவார். (ஐ)

# கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் ஆயிரத்து 639 பேர் குணமடைவு

கொழும்பு, ஜூன் 25

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் ஆயிரத்து 639 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 12 ஆயிரத்து 825 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 46 ஆயிரத்து 109 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், கொரோனா தொற்றினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 769 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# நீதி இல்லாத நாட்டில் சூரியன் உதிக்காது!

## பாரதவின் மனைவி சாபம்

கொழும்பு, ஜுன் 25

“கொலையாளியை விடுதலை செய்து, நீதியை சிறை வைத்துள்ளனர். நீதி இல்லாத நாட்டில் சூரியன் உதிக்காது.”

- இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் மனைவி தெரிவித்துள்ளார்.

பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர கொலை வழக்கில் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, ஜனாதிபதி பொது மன்னிப்பின்கீழ் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

இதற்கு பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் மனைவி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

“மேல்நீதிமன்ற நீதிபதிகள் மூவரும், உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஐவரும் வழங்கிய தீர்ப்பை நடைமுறைப்படுத்தாத நாடு. ஒரு நாடு பல சட்டங்கள் உள்ளன என்பது விடுதலைமூலம் உறுதியாகியுள்ளது.” எனவும் அவர் தனது முகநூல் பக்கத்தில் விமர்சித்துள்ளார்.

# சகல அரசியல் கைதிகளையும் விரைந்து விடுவிக்கவேண்டும்

## விடுதலையான தமிழ் அரசியல் கைதி கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜுன் 25**

**எங்கள் விடுதலைக்காக குரல் கொடுத்து வந்த மக்களுக்கும், எமது விடுதலைக்காக செயல்பட்டவர்களுக்கும், எம் விடுதலையை சாத்தியமாக்கியவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்வதாக விடுதலையான அரசியல் கைதியான சூரியகாந்தி ஜெயச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**



ஏனைய அரசியல் கைதிகளையும் விரைவாக விடுவிக்கவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்றைய தினம்(நேற்று) பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்ட எம்மை போன்ற உறவுகள் சிலர் இன்னமும் சிறைகளில் உள்ளனர். அவர்களையும் மிக விரைவில் விடுவிக்க வேண்டும் என கோருகிறோம்.

பலர் செய்யாத குற்றங்களுக்காக நீண்டகாலமாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரையும் விடுவித்து, அவர்களையும் சமூகத்துடன் வாழ வைக்க வேண்டும்-என்றார்.

பொசனை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் மூலம் 16 தமிழ் அரசியல் கைதிகள் உள்ளிட்ட 93 பேர் நேற்று நாடளாவிய ரீதியில் விடுவிக்கப்பட்டனர்.

அவர்களில் யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சூரியகாந்தி ஜெயச்சந்திரன் என்பவரும் விடுவிக்கப்பட்டார்.

இவர் விடுதலையாகி குடும்பத்துடன் இணைந்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே அவ்வாறு கூறினார்.

இவர் கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார். (அ)

# கிளிநொச்சி ஆடை ஆலை ஊழியர்களுக்கு கோவிட் தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பம்!

கிளிநொச்சி, ஜுன் 25

கிளிநொச்சி ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு இராணுவத்தினரின் ஏற்பாட்டில் கொவிட் தடுப்பூசி ஏற்றும் பணிகள் நேற்று ஆரம்பமாகின.

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள தனியார் ஆடைத்தொழிற்சாலை இரண்டிலும் சுமார் 3,000 பேர் பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கான தொற்று பரவலை கட்டுப்படுத்தும் வகையில் கிளிநொச்சி இராணுவத் தலைமையகம் நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

கிளிநொச்சி இராணுவ தலைமையகக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எச்.பிரணசிங்கவினால் இராணுவத் தளபதிக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக தடுப்பூசி ஏற்றும் பணிகள் நேற்று ஆரம்பமாகின.

இரண்டு ஆடைத் தொழிற்சாலைகளையும் சேர்ந்த சுமார் 3,000 பணியாளர்களுக்கு குறித்த தடுப்பூசி ஏற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்திற்கு 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட தடுப்பூசிகள் முதல் கட்டமாக தேவைப்படும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் அண்மையில் ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# அரசியல் கைதிகள் விடுதலையின் பின்னால் அரசியல் உள்நோக்கம்!

## இராதாகிருஷ்ணன் கூறுகிறார்

கொழும்பு, ஜுன் 25

“நல்லாட்சி அரசாங்கத்திலும் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அதில் நல்ல நோக்கம் இருந்தது. தற்போது இந்த அரசில் 16 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆனால், இதன் பின்னணியில் அரசியல் உள்ளது. நாமல் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் அறிவிப்பு விடுத்து இரு நாட்களில் விடுதலை இடம்பெறுகின்றது.” - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

கொரோனா பரவல் மற்றும் மரணம் தொடர்பில் உரிய தரவுகள், உரியவகையில் வழங்கப்படாததாலேயே பயணத்தடையை நீடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக ஜனாதிபதி தெரிவித்தார். ஜனாதிபதிக்கு தவறான தகவலை வழங்கியது இராணுவமா, சுகாதாரப் பிரிவா என்பது தெரியாது. ஆனால் உண்மையான தகவல்கள் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

அதேபோல இரசாயன உரம் குறித்தும் ஜனாதிபதிக்கு தவறான தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதனை அடிப்படையாக வைத்து அவர் தீர்மானம் எடுத்துள்ளதால் தற்போது பிரச்னை எழுந்துள்ளது. எனவே, உண்மை நிலைவரத்தை தேடி அறிந்து ஜனாதிபதி சிறந்த முடிவை எடுக்க வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கத்திலும் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அதில் நல்ல நோக்கம் இருந்தது. தற்போது இந்த அரசில் 16 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இதன் பின்னணியில் அரசியல் உள்ளது. நாமல் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் அறிவிப்பு விடுத்து இரு நாட்களில் விடுதலை இடம்பெறுகின்றது. தமிழ் மக்கள் மீதுள்ள அக்கறையில் அவர்களை விடுத்திருந்தால் வரவேற்போம்.

நாட்டில் தொழிலாளர்களுக்கென சட்டம் உள்ளது. சர்வதேச சமவாயங்களும் உள்ளன. எனினும், ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வின் பின்னர் தோட்ட நிர்வாகங்களும், முகாமையாளர்களும் தன்னிச்சையாக, சர்வாதிகாரிபோல் செயல்படுகின்றனர். 20 கிலோ கொழுந்து பறிக்குமாறு அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு நடைபெறும் காட்டுச்சட்டத்துக்கு முற்றுபுள்ளி வைக்கவேண்டும்.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண விடம் கலந்துரையாடினேன். கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட 5 நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன என்று குறிப்பிட்டார். ஏனைய நிறுவனங்கள் உயர்நீதிமன்ற தீர்ப்புக்காக காத்திருக்கின்றன. எது எவ்வாறு அமைந்தாலும் தொழிற்சங்கங்களுக்கும், நிர்வாகத்துக்குமிடையில் ஒப்பந்தமொன்று இருப்பதே சிறப்பு.” - என்றார். (அ)

# தமிழர் ஒருவர் தமிழரை சுடுவதை ஏற்கமுடியாது

## கூறுகின்றார் கருணா



கொழும்பு, ஜுன் 25

தமிழரொருவர் தமிழரை சுடுவதென்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என பிரதமரின் கிழக்கு மாகாண இணைப்புச் செயலாளர் விநாயகமூர்த்தி முரளிதரன்(கருணா) தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பில் வியாழேந்திரனின் மெய்ப்பாதுகாவலரால் நபரொருவர் மீது மேற்கொள்ளப்பட்ட சூட்டு சம்பவம் முற்றுமுழுதாக ஒரு கொலை. இது தொடர்பில் உரியவாறு விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் கடிதமொன்றை அனுப்பியிருக்கின்றோம்.

ஏனென்றால் மெய்ப்பாதுகாவலராக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை நியமிப்பதுதான் வழக்கம். எம்.எஸ்.டி என்று சொல்லப்படுகின்ற அந்த பிரிவில் உண்மையிலே அனுபவம் வாய்ந்த சிறந்த அதிகாரிகளை நியமிப்பதுதான் அரசாங்கத்தின் கடமை. ஆகவே அதனை மீறி அனுபவமற்ற ஒரு இளைஞன் அதுவும் ஒரு தமிழ் இளைஞன் இவ்வாறு தனது துப்பாக்கியால் கொலை செய்திருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

பொறுப்பு வாய்ந்த பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் முன்னுக்கு பின் முரணான செய்திகளை வெளியிட்டு அந்த கொலைச் சம்பவத்தை மறைப்பதற்கு முற்பட்டு வருகிறார். ஏனென்றால் மூன்று மாதமாக தனது வீட்டு சி.சி.ரி.வி கமரா வேலை செய்யவில்லை என்பதும், பக்கத்து வீட்டு கமரா கூட வேலை செய்யவில்லை என்பதும், கண்மூடித்தனமான சிறுபிள்ளைத்தனமான செயல்பாடு.

இதனை துப்பறியும் ஆய்வகத்துக்கு அனுப்பும்போது அவர்களால் எதனையும் மறைக்க முடியாது. இந்த கொலையை மறைக்க முற்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.இதனை அவர் பொறுப்பேற்க வேண்டும்.

தமிழரொருவர் தமிழரை சுடுவதென்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. எடுத்த வுடனேயே அவர் துப்பாக்கியால் சுட்டிருப்பது ஒரு திட்டமிடப்பட்ட செயலாகவே காணப்படுகிறது.

வருகின்ற தகவல்களின் படி அந்த சம்பவம் நடைபெறுவதற்கு மூன்று நாட்களுக்கு முன் உயிரிழந்த நபர் அவர்களுடன் முரண்பட்டுள்ளார்.

என்னை பொறுத்தவரை வியாழேந்திரன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய விடயம். இது தொடர்பில் வியாழேந்திரன் முன்னுக்கு முரணான தகவல்களை வெளிப்படுத்துவதென்பது ஏற்றுக் கொள்ள முடியாத விடயம்.

இதனை சட்ட ரீதியாக பார்க்கின்றபோது அமைச்சர் கூறுகிறார் நான் அங்கு இருக்கவில்லை என்று. ஆனால், அவர் 12 மணி வரை வீட்டில் இருந்ததற்கான ஆதாரம் இருக்கின்றது-என்றார். (அ)



■ ஞானசுந்தரம் குகநாதன், சுவிஸ்

> தெற்கில் செயற்பட்ட, முற்போக்கு சிந்தனை கொண்ட, தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்த சிறிதுங்க ஜெயசூரிய, வாசுதேவ நாணயக்கார, கலாநிதி விக்ரமபாகு கருணாரத்தின, மனோ கணேசன் போன்றவர்களுடன் கரம்கோர்த்த ரவிராஜ், சிவில் கண்காணிப்பு குழு என்ற அமைப்பினூடாக தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தார். வடக்கு, கிழக்கில் தமிழர்கள் கொலை செய்யப்படுதல், கைதாகி சித்திரவதை செய்யப்படுதல் போன்றவற்றுக்கு எதிராக உரத்து குரல் கொடுத்தார்.

# சிங்கள முற்போக்கு சக்திகளுடன் இணைந்து தமிழர்களுக்காக குரல் கொடுத்த ரவிராஜ்




**மாமனிதர் ரவிராஜ் அவர்களின் 59 ஆவது ஜனன தினத்தையொட்டிய நினைவுப் பதிவு**

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமும் பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. இந்தப் போராட்டத்தில் பல தமிழ்த் தலைவர்களை தமிழினம் இழந்து நிற்கிறது. அந்த வகையில் தமிழர்களுக்கு எதிரான கொடுமைகளை துணிந்து நின்று இலங்கை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் எடுத்துக்கூறி வந்த இளம் தமிழ் தலைவரான மாமனிதர் நடராஜா ரவிராஜின் 59ஆவது ஜனன நாளையொட்டி அவர் குறித்த சிறு நினைவை இங்கு பதிவு செய்ய விழைகிறேன்.



தென்மராட்சி மண்ணில் புகழ்பூத்த ஆசிரியப் பெருந்தகைகளின் புதல்வராக 25-06-1962 இல் அவதரித்த ரவிராஜ் ஆரம்பக் கல்வியை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் தொடங்கினார். பின்னர் யாழ் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இடைநிலைக் கல்வியை தொடர்ந்த அவர், பின்னர் சட்டக் கல்லூரியில் இணைந்து 1987 இல் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்தார்

1990 இல் சட்டமா அதிபர் அலுவலகத்தில் இணைந்து கொண்ட அவர் 1993 ஆம் ஆண்டு வரை அங்கு பணியாற்றி சட்டத்துறை நுணுக்கங்களைப் பெற்று வெளியேறினார். பின்னர் மனித உரிமை இல்லத்தில் இணைந்து 1996 வரை அங்கு பணியாற்றி மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களை அறிந்து கொண்டார்.

அதன் பின்னர் சுயாதீனமாக செயற்பட ஆரம்பித்த அவர் இலங்கையில் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக உள்ளூரிலும் சர்வதேசத்திலும் உரக்கக் குரல் கொடுத்தார். கொழும்பிலும் சர்வதேச நாடுகளிலும் உள்ள மனித உரிமை செயல்பாட்டாளர்களுடன் இணைந்து செயற்படத் தொடங்கினார். வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் உறவுகளைப் பேணிய அவர், தான் சார்ந்த இனத்திற்கு எதிரான மனித உரிமைகள் மீறல்கள் குறித்து ஆணித்தரமாக ஆதாரங்களுடன் எடுத்துக் கூறி வந்தார்.

இந்தக் கால கட்டத்தில் 1996 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து அரசியலில் கால்பதித்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் பல பதவிகளை அலங்கரித்த அவர் நெருக்கடியான காலகட்டத்தில் யாழ் மாநகர சபையின் மேயர் பதவியையேற்று சிறப்புறப் பணியாற்றினார்.

பின்னர் 2001 டிசம்பர் மாதம் நடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட அவர், பாராளுமன்றுக்கு தனது 39வது வயதில் காலடி பதித்தார். நாடாளுமன்ற இளம் உறுப்பினரான அவர், தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் தான் கொண்ட புலமை ஊடாக தமிழ் மக்களுக்கு எதிரான கொடூரங்களை பாராளுமன்றத்திலும் சர்வதேச மட்டத்திலும் புட்டுப்புட்டு வெளிப்படுத்தினார். பாராளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரைகள் தமிழ் மக்களுக்கு எதிரான கொடுமைகளை அப்பட்டமாக வெளிப்படுத்தி நின்றன.

தெற்கில் செயல்பட்ட, முற்போக்கு சிந்தனை கொண்ட, தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்த சிறிதுங்க ஜெயசூரிய, வாசுதேவ நாணயக்கார, கலாநிதி. விக்ரமபாகு கருணாரத்தின, மனோ கணேசன் போன்றவர்களுடன் கரம்கோர்த்த ரவிராஜ், சிவில் கண்காணிப்பு குழு என்ற அமைப்பினூடாக தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தார்

வடக்கு கிழக்கில் தமிழர்கள் கொலை செய்யப்படுதல், கைதாகி சித்திரவதை செய்யப்படுதல் போன்றவற்றுக்கு எதிராக உரத்து குரல் கொடுத்தார். நீதிமன்றங்களூடாகவும், இராஜதந்திரிகளூடாகவும் குரல் கொடுத்து நியாயம் கேட்டார். பத்திரிகை வாயிலாகவும் தொலைக்காட்சி வாயிலாகவும் ஆணித்தரமாக, அரசின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தார்.

2004 ஏப்ரல் மாதம் நடந்த தேர்தலிலும் போட்டியிட்டு மீண்டும் பாராளுமன்றத்திற்கு தெரிவான அவர், அரசாங்கத்துக்கும் இராணுவத்துக்கும் எதிராக முற்போக்கு சிந்தனை கொண்ட சிங்கள, தமிழ்த் தலைவர்களுடன் இணைந்து குரல் கொடுத்து வந்தார்.

கொழும்பில் தங்கியிருந்து சிங்களத் தலைவர்களுடன் இணைந்து, அவர்களுக்கு புரிந்த மொழியில் தமிழர்களுக்கு எதிரான கொடூரங்கள் குறித்தும் தமிழ் மக்களின் உரிமைகள் குறித்தும் எடுத்துக்கூறி தமிழ் - சிங்கள மக்களிடையேயான புரிந்துணர்வுக்கு வித்திட்டார்.

கொழும்பில் அரசுக்கு எதிரான போராட்டங்களில் தனி ஒருவராக பங்கேற்று, உரத்த குரலில் கொடூரங்களை வெளிப்படுத்தினார். அந்த வகையில் கொழும்பில் நடந்த போராட்டமொன்றில்பங்குபற்றிய மறுநாள், கொழும்பில், பட்டப் பகலில் வீதியில்வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.


39வது வயதில் பாராளுமன்றம் சென்று தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்துக் கொண்டிருந்த ரவிராஜ் அவர்களின் உயிர், அவரின் 44ஆவது வயதில் அதுவும் இளம் வயதிலேயே பறிக்கப்பட்டுவிட்டது. சொற்ப காலமே அவர் தமிழ் அரசியல் தலைமையில் இருந்த போதும் கொண்ட கொள்கையில் இருந்து விலகாது, தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்தார்.

இளம் சட்டத்தரணியாக, இளம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அவர், தனது துணிச்சலான செயல்பாடுகள் மூலம் தமிழ் மக்கள் மனதில் முக்கிய இடம் பிடித்து விட்டார்.

மேலும், மாமனிதர் ரவிராஜ் காட்டிய வழியில் அவரின் துணைவியார் சசிகலா ரவிராஜூம் அரசியலில் கால் பதித்துள்ளார். கடந்த தேர்தலில் அவர் போட்டியிட்டார். பெரும்பான்மையானவர்கள் அவருக்கு ஆதரவு தெரிவித்தனர். அடுத்து வரும் தேர்தலில் அவர் வெற்றி பெற்று மாமனிதர் ரவிராஜூன் வழியில் அவரும் பயணிக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பமாகும். அரசியலில் அவர்கள் சிறப்பாக செயல்பட ஆதரவு வழங்குவதே ரவிராஜூற்கு வழங்கும் கைமாறாகும் என்பதே தமிழ் மக்களின் சிந்தனையாகும்.

வி.என்.நவரத்தினம் , வீ.எஸ்.குமாரசாமி, மாமனிதர் நடராஜா ரவிராஜ் போன்ற அரசியல் நாகரிகமும், கண்ணியமும், ஆளுமையும், மக்கள் செல்வாக்கும் நிறைந்த அரசியல் தலைவர்களின் பின்னர் தென்மாரட்சி பகுதியிலிருந்து திறமைவாய்ந்த, நேர்மையான அரசியல் நாகரிகம் மிக்க, அரசியல் தலைவர்கள் இன்னும் உருவாகவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். அதே நேரம் அது சிரத்தைக்கும் உரியதாகும்.

# தமிழ் வளர்த்த தீவக சான்றோர்கள்




யாழ்ப்பாணம் தீவுப்பகுதியில் சான்றோராக வாழ்ந்து மடிந்த புலவர்கள், அறிஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், சமயப்பற்றார்கள் பற்றி அச்சில் வெளிப்படுத்திய நூலொன்று வெளியாகியுள்ளது. "தமிழ் வளர்த்த தீவகச் சான்றோர்கள்" என்ற பெயருடன் 1279 பக்கங்களைக் கொண்டு வெளியாகியுள்ள இந்நூலினை அல்லைப்பிட்டியைச் சேர்ந்த கலாநிதி பண்டிதர் செ. திருநாவுக்கரசு எழுதியுள்ளார்.

இந்நூலை மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழாசானாகவும், வேலணை மத்தியகல்லூரியின் அதிபராகவும் (1982 -1983), ஓய்வுபெற்ற பின்னரும் கற்பித்தலைத் தொடர்ந்த நல்லாசான் பண்டிதர் கதிரவேலு இராசையா (1923 - 1998) அவர்களுக்கு 'குருவே தெய்வம்' எனச் சமர்பணம் செய்திருக்கிறார். இந்த ஆசானை அகத்தூண்டுதலாக பெற்ற வாழ்வின் பிரதிபலிப்பை தனது ஓய்வுக் காலத்தின் பின்னரும் செயலாக்கி பணியாக்கி இந்நூலை எமது கைகளில் தந்திருக்கிறார் நூலாசிரியர்.

கடந்த இரு நூற்றாண்டு காலத்தில் தீவகத்தில் பிறந்து பிரசித்தி பெற்று விளங்கிய சான்றோர்களின் பெயர்கள் அழிந்துவிடக் கூடாது என்ற பெருநோக்கத்துடன் இந்நூல் அமைந்திருக்கிறது என்பதை உணர முடிகிறது.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகவும், உப அதிபராகவும், யாழ் பிராந்திய தேசியக் கல்வி நிலையத்தில் 15 வருடங்களுக்கு மேலாக பட்டப் பின் கல்விச் சான்று (டிப்ளோமா) மற்றும் முதுகலைமாணி பட்டம் பெற்ற நூலாசிரியர், தமிழ்த்துறை மாணவர்களுக்கு பகுதி நேர விரிவுரையாளராகவும், யாழ். பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவ வருகை விரிவுரையாளராகவும் பணியாற்றி வந்தார்.

இலங்கை அரசின் கல்வித் திட்டத்திற்குரிய பத்துக்கும் மேலான தமிழ்ப் பாட நூல்களையும் எழுதியிருக்கிறார். இலங்கை முழுவதும் இவர் எழுதிய க. பொ. த. சாதாரணதரம், உயர் தரம் வகுப்புகளுக்கான தமிழ் நூல்களே பிரபல்யம் பெற்று விளங்குவதை அவதானிக்க முடிகிறது. பல பாட நூல்கள் மட்டுமல்ல பத்துக்கு மேற்பட்ட வேறு பல நூல்களையும் வெளியிட்டிருக்கும் நூலாசிரியருக்கு யாழ்ப்பாண இந்துக் கல்லூரி தமிழ்ச் சங்கம் 'நற்றமிழ் காவலர்' என்ற விருதையும் வேலணை மத்திய கல்லூரி 'ஞானவியன்மணி' விருதையும் வழங்கிக் கௌரவித்திருக்கின்றன.

இந்நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் கலைப் பீடாதிபதி பேராசிரியர் கார்த்திகேசு குகபாலன் மேற்கண்ட விபரங்களை பதிவு செய்திருக்கிறார்.

அகில இலங்கை இந்துமாமன்ற உப தலைவரும் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவருமான கலாநிதி ஆறு. திருமுருகன் வாழ்த்துரை வழங்கியுள்ளார்.

'தமிழ் வளர்த்த தீவகச் சான்றோர்கள்' நூலின் வழி இலங்கையில் பிரசித்திபெற்று விளங்கிய பலரது பெயர்கள் நமக்கு பழக்கப்பட்டதாக இருந்திருந்தாலும் அவர்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதை தெரிந்திருக்காமல் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்நூலைப் படிப்பவர்களுக்கு உணர்த்தும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலில் தீவகம் தந்த 110 சான்றோர் பற்றிய தேடல் விபரங்கள் இடம்பெற்றுள்ளன. இதனைத் தேடித் தொகுத்தளிக்க பல வருட கடின உழைப்புடனான பணி மேற்கொள்ளப்பட்டிருப்பதைக் குறிபிடாது கடந்துவிட முடியாது. இதனை நேர்த்தியாக அச்சேற்றியமை இந்நூலின் கனதியை இயல்பாகவே வெளிப்படுத்துகிறது.

தீவகத்தில் தனித்துவத் தடமிட்டவர்களாக வாழ்ந்து மடிந்த சான்றோர்களது வரலாற்றுத் தகவல்களை எதிர்காலச் சந்ததியினருக்கு முறைப்படி கையளிக்கும் மாபெரும் பணியை இந்நூல் வழியில் கையளித்திருக்கிறார் கலாநிதி செ. திருநாவுக்கரசு.

**தொடர்பு விபரம் :**

**ஐரோப்பா : எஸ். கே. காசிலிங்கம்**
kasisaba45@gmail.com

**கனடா : எஸ் இளஞ்செழியின்**
**(வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க கனடா கிளைத் தலைவர்)**
**0014169497795**

**இலங்கை : செ. திருநாவுக்கரசு**
vijayaledchumi@gmail.com
*0094776360294 - 0094212054016*

---

# இலங்கையை அச்சுறுத்தும் 'டெல்டா' தெரிந்திருக்க வேண்டிய தகவல்கள்

அண்மைக்காலம் முதல் நமது பக்கத்து நாடான இந்தியாவில் வேகமாக பரவி வரும் கோவிட்-19 வைரஸின் டெல்டா (B.1.617.2) எனப்படும் புதிய வகை இலங்கையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இப்புதிய வகை தொற்று நோய் வைரஸ் தற்போது நாம் எதிர்கொண்டு வரும் நெருக்கடி நிலைக்கு எவ்வாறு தாக்கம் செலுத்தும் மற்றும் இது ஏற்கனவே பரவி வரும் கோவிட்-19 வைரஸிலும் பார்க்க என்ன விதத்தில் வேறுபடும் போன்ற தகவல்களை நாம் அறிவது நல்லது.

எனவே, இது பற்றிய GAVI (Global Alliance for Vaccines and Immunization) என்ற சர்வதேச நிறுவனத்தின் அறிக்கையின் அடிப்படையில் சில விடயங்களை முன் வைக்க நாம் எண்ணுகின்றோம்.

இவ்வறிக்கையை இவ்விணையப்பக்கத்தில் காணலாம்: https://www.gavi.org/... /five-things-we-know-about-delta..




**பொதுவாக ஒரு வைரஸ் பரவும் போது அதன் விகாரப்படுத்தப்பட்ட வகையும் உருவாவது இயல்பே. இதன் போது ஏற்கனவே தோன்றிய வைரஸை வேகமாக பரவச்செய்யவும் இது போன்ற புதிய வகைகள் துணை புரிவதுண்டு. அதே போன்று. புதிய வகை, எற்கனவே உள்ள வைரஸ் வகையை விட அதி துரிதமாக பரவுவதுண்டு.**

இதன் போது, இது போன்ற புதிய வகை வைரஸ்கள் பற்றிய ஆரம்ப கட்ட தகவல்கள், கிடைக்கப் பெறும் சிறிதளவு மாதிரிகள் அடிப்படையிலேயே இருப்பதுடன் அவை தொடர்பான தகவல்கள் மட்டுப்பட்டதாகவும் இருப்பதால் அவை பற்றிய முழு விபரமும் முதலில் தெரிய வருவதில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அத்துடன், தற்போது தெரிய வந்துள்ள தகவல்கள் புதிதாக பெறும் தகவல்களில் இருந்து வேறுபடலாம் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பொதுவாக ஒரு வைரஸ் பரவும் போது அதன் விகாரப்படுத்தப்பட்ட வகையும் உருவாவது இயல்பே. இதன் போது ஏற்கனவே தோன்றிய வைரஸை வேகமாக பரவச்செய்யவும் இது போன்ற புதிய வகைகள் துணை புரிவதுண்டு. அதே போன்று. புதிய வகை, எற்கனவே உள்ள வைரஸ் வகையை விட அதி துரிதமாக பரவுவதுண்டு.

கோவிட்-19 முதலில் தோன்றிய காலகட்டம் முதல் இது போன்ற அதன் புதிய வடிவங்கள் பல நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே. இது போன்ற தருணங்களில் முன்பை விட நோய் எளிதாக தொற்றுவதும் நோய் பரவும் வேகம் துரிதமடைவதும் உண்டு.

இதேவேளை, கோவிட்-19 நோய்க்கு எதிராக தடுப்பு மருந்து பெற்றவர்களுக்கு டெல்டா (B.1.617.2) எனப்படும் இந்த புதிய வகையின் தாக்கத்தில் இருந்தும் தொடர்ந்து பாதுகாப்பு கிடைப்பதும் புலனாகியுள்ளது. ஆனால், பொதுவாக தடுப்பு மருந்துகள் நூறு சதவீமான பாதுகாப்பை தருவதில்லை என்பதையும் நாம் அறிதல் வேண்டும். இருந்தாலும், தற்போது இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கோவிட்-19 தடுப்பு மருந்து செயல்திட்டமானது முதலில் தோன்றிய மற்றும் அதன் பின் உருவாகியுள்ள அனைத்து வகை வைரஸ்களில் இருந்தும் குறிப்பிடுமளவு பாதுகாப்பைத் தரவல்லதாகும்.

இருந்தாலும், கோவிட்-19 நோயில் இருந்து நம்மை தற்காத்துக் கொள்ள கடைபிடிக்குமாறு சுகாதார அதிகாரிகளால் பரிந்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை, குறிப்பாக புதிய வைரஸ் வகை கண்டுபிடிபிக்கப்பட்டுள்ள தற்போதைய சூழ்நிலையில், தொடர்ந்தும் கடைபிடிப்பது மிகக் கட்டாயமாகும். அதிலும், அதிக சன நெரிசல் உள்ள (வெளிப்புறம் அல்லாத) இடங்களை தவிர்ப்பது மிக அவசியமாகும்.

முதலில் தோன்றிய கோவிட்-19 வகையைப் போன்றே புதிதாக தோன்றியுள்ள வைரஸின் நோய் அறிகுறிகள் தென்பட சில நாட்கள் ஆகலாம். சிலவேளை வைரஸ் உடலில் இருந்த போதிலும் நோய் அறிகுறிகள் சிலருக்கு தென்படாமலேயே இருக்கலாம். இதன் காரணமாக நோயறிகுறிகளற்ற நமது உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களில் ஆரோக்கியமாக உள்ளவர்களிடமிருந்தும் இந்நோய் தொற்ற வாய்ப்புண்டு.

எனவே, உங்களையும் உங்கள் அன்பிற்குரியவர்களையும் இக்கொடிய நோயில் இருந்து பாதுகாத்துக்கொள்ள, தேவையற்ற பயணங்களை தவிர்த்தவண்ணம், பரிந்துரைக்கபட்ட தற்காப்பு நடைமுறைகளை பேணியபடி, அதிக எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.

- Health Promotion Bureau

# புலமைச் சிகரம்


**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை - 6
வினாத்தாள் I

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - சரத்பாபு

**28.** ஒரு மரத்திலுள்ள புறாக்களினது எண்ணிக்கை குயில்களின் எண்ணிக்கையின் மூன்று மடங்கு ஆகும். சிறிது நேரத்தில் 8 குயில்கள் பறந்து வந்து மரத்தில் அமர்ந்த பின், புறாக்களினதும் குயில்களினதும் எண்ணிக்கை சமனாகும் எனில், இப்போது மரத்திலுள்ள புறாக்களினதும் குயில்களினதும் மொத்த எண்ணிக்கை யாது?

1. 32 2. 16 3. 24


**29.** 

உருவிலுள்ள கடிகார முகத்திலுள்ள நிமிடமுள், மணித்தியால முள் ஆகியவற்றுக்கு இடையிலான கோணம் செங்கோணமாக அமைவதற்கு, நிமிடமுள் எத்தனை தடவைகள் கடிகார முகத்தைச் சுற்றி வர வேண்டும்?

1. 4 2. 3 3. 5

**30.** உமாவும், ராணியும் பண்ணை ஒன்றில் வேலை செய்கின்றனர். உமாவுக்கு மூன்று நாட்களுக்கு ஒரு முறையும், ராணிக்கு ஐந்து நாட்களுக்கு ஒரு முறையும் விடுமுறை கிடைக்கும். இருவருக்கும் ஜனவரி மாதம் 6 ஆந் திகதி ஒன்றாக விடுமுறை கிடைத்தால், இருவருக்கும் மீண்டும் எப்போது ஒன்றாக விடுமுறை கிடைக்கும்?


1. ஜனவரி 30 2. ஜனவரி 16 3. ஜனவரி 18


**31.** 

உருவிலுள்ள திண்மவுருவை படத்திலுள்ளவாறு முறிந்த கோடு வழியே இரு சம பகுதிகளாக வெட்டும் போது, ஒரு பாதியிலுள்ள விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

1. 7 2. 8 3. 9


**32.** பின்வரும் உருவில் எண் ஒன்றினை, இலக்க அட்டையினால் காட்டப்படும் விதம் காட்டப்பட்டுள்ளது.





அருகில் தரப்பட்டுள்ள எண் அட்டையில் அம்புக்குறியினால் வகை குறிக்கப்படும் இலக்கத்தைத் தெரிவு செய்க.

1. 4 2. 6 3. 7

**33.** அருகில் தரப்பட்டுள்ள 35cm நீளமும் 18cm அகலமும் கொண்ட செப்புத் தகட்டிலிருந்து  அளவுடைய எத்தனை வட்ட வடிவான செப்புத்தகடுகள் வெட்டி எடுக்கலாம்?





1. 35 2. 28 3. 32


**34.** ஒரு முடையிலிருந்து 3kg 475g சீனியை விற்பனை செய்த பின்னர், 2kg 625g சீனி எஞ்சியிருந்தது. எஞ்சியுள்ள சீனியில் 125g நிறையுடைய எத்தனை சிறிய பக்கற்றுக்களைத் தயாரிக்கலாம்?

1. 18 2. 20 3. 21


**35.** பின்வரும் தொடர்பை அவதானித்து சரியான விடையைத் தெரிவு செய்க.




கீழே தரப்பட்டுள்ள எத்தொடர்பு மிகவும் சரியானது?




* கோலத்திற்கேற்ப அடுத்து வரும் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

**36.** 




**37.** குமார், ரவி, அரவிந்த் ஆகியோர் நூலகம் சென்றனர். குமார், அரவிந்தவுக்கு முன்னரே புத்தகம் ஒன்றை வாசிக்கத் தொடங்கி, அரவிந்தவுக்கு பின்னரே வாசித்து முடித்தான். ரவி, அரவிந்தவுக்குப் பின்னரே புத்தகமொன்றை வாசிக்கத் தொடங்கி, குமாருக்கு முன்னரே புத்தகமொன்றை வாசித்து முடித்தான் எனில், அதிக நேரம் புத்தகம் வாசித்தவர்?

1. குமார் 2. ரவி 3. அரவிந்த

* நகரம் A க்கும், நகரம் B க்கும் இடையிலான தூரம் 240 மீற்றர் ஆகும். A என்ற நகரிலிருந்து அதிகாலை 4.30 மணிக்கு லொறி ஒன்று மணித்தியாலயத்திற்கு 30 கிலோ மீற்றர் எனும் வேகத்தில் B யை நோக்கிச் சென்றது. B என்ற நகரிலிருந்து காலை 5.30 மணிக்கு பேருந்து ஒன்று மணித்தியாலயத்திற்கு 40 கிலோ மீற்றர் எனும் வேகத்தில் A ஐ நோக்கிச் சென்றது.

**38.** லொறியும், பேருந்தும் A யிலிருந்து எத்தனை கிலோமீற்றர் தூரத்தில் ஒன்றையொன்று சந்திக்கும்?

1. 90 கிலோமீற்றர் 2. 120 கிலோமீற்றர் 3. 140 கிலோமீற்றர்

**39.** லொறியும், பேருந்தும் ஒன்றையொன்று சந்திக்கும் நேரம் யாது?

1. மு.ப 7.30 2. மு.ப 8.30 3. மு.ப 9.30

**40.** ஒன்று தொடக்கம் முப்பது வரையான எண்களை எழுதிக் கூட்டும் போது வரும் மொத்தத் தொகையைத் தெரிவு செய்க.

1. 930 2. 210 3. 890

# ரணிலும், மஹிந்தவும் சங்கமித்தால் நாடு முன்னேறும்!

## இது மக்களின் விருப்பம் என்கின்றார் முருத்தெட்டுவ ஆனந்த தேரர்

கொழும்பு, ஜூன் 25

"ரணில் விக்கிரமசிங்கவின் மூளையையும், மஹிந்த ராஜபக்ஷவின் உடலையும் ஒன்றாக இணைத்தால் நாட்டுக்கு பெரும் சேவை செய்ய முடியும் என்ற கருத்து மக்கள் மத்தியில் நிலவுகின்றது. அந்தவகையில் பாராளுமன்றத்தில் இருக்கவேண்டிய தலைவர்தான் ரணில் விக்கிரமசிங்க. அவரின் வருகையை முன்னிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். விமர்சனங்கள் இருந்தாலும் ரணிலும் நாட்டுக்கு சேவையாற்றியுள்ளார். அதனை மறக்கக்கூடாது."

- இவ்வாறு அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவ ஆனந்த தேரர் தெரிவித்தார்.




பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்த பின்னர், ரணில் விக்கிரமசிங்க அபயராம விகாரைக்குச் சென்று முருத்தெட்டுவ ஆனந்த தேரரிடம் ஆசி பெற்றார். இதன்போதே தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

அதாவது ரணில் விக்கிரமசிங்கவிடம் சிறந்த மூளை உள்ளது, மஹிந்த ராஜபக்ஷ மக்களால் விரும்பப்படும் தலைவர். இவர்கள் இருவரும் இணைந்தால் நாட்டுக்கு நல்லது என மக்கள் கருதுகின்றனர் என்பதையே மேற்படி கூற்றின் ஊடாக தேரர் கூற விளைகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

# யாழ்ப்பாணம் உட்பட 3 மாவட்டங்களில் ஏழு கிராம சேவகர் பிரிவுகள் முடக்கம்!

## இராணுவ தளபதி அறிவிப்பு



**கொழும்பு, ஜூன் 25**

**யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் 7 கிராம சேவகர் பிரிவுகள் நேற்றுக் காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொரோனா தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

இதன்படி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் குருநகர் மேற்கு , ரெக்லமேசன் மேற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி பொலிஸ் பிரிவில் மஞ்சந்தொடுவாய் வடக்கு, மஞ்சந்தொடுவாய் தெற்கு ஜின்னா வீதி கிராம சேவகர் பிரிவுகளும், மண்முனை பொலிஸ் பிரிவில் மாமாங்கம் கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், குருநாகல் மாவட்டத்தில், குருநாகல் பொலிஸ் பிரிவில் இழுப்பு கெதர கிராம சேவகர் பிரிவில் வில்கொட கிராமும், கனுக்கெட்டிய கிராம சேவகர் பிரிவில் கனுக்கெட்டிய கிராமமும் மறு அறிவித்தல் வரை இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் இராணுவத் தளபதி மேலும் குறிப்பிட்டார். (இ)

### இரு வியாபார நிலையங்கள் புறக்கோட்டையில் தீக்கிரை!

கொழும்பு, ஜூன் 25

புறக்கோட்டை போதிராஜ மாவத்தைக்கு அருகிலுள்ள இரு வர்த்தக நிலையங்களில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தால் அந்த வர்த்தக நிலையங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

பாடசாலை உபகரணங்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களே தீக்கிரையாகியுள்ளன.

தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் தீயணைப்புப் பிரிவின் நான்கு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# ரணிலின் அரசியல் புரட்சி 'பூச்சியம்'

## - சஜித் அணி தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 25

"ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையேற்று ரணில் விக்கிரமசிங்க 27 ஆண்டுகள் அரசியல் புரட்சி செய்தார். அதன் விளைவால்தான் அக்கட்சி இன்று பூச்சிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

ஓர் ஆசனத்தை வைத்துக் கொண்டு ரணில் விக்கிரமசிங்க, அரசியலில் பெரும் புரட்சியை ஏற்படுத்துவார் என விடுக்கப்படும் அறிவிப்புகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ரணில் விக்கிரமசிங்கவால் இன்னும் ஒருதடவைகூட ஜனாதிபதியாக முடியவில்லை. பல மான எதிரணியையும் அவர் கட்டியெழுப்ப வில்லை. எதிரணிக்குரிய பொறுப்பை ஐக்கிய மக்கள் சக்தியே இனி நிறைவேற்றும்.

ரணில் 27 வருடங்கள் புரட்சி செய்தார்தான். ஆனால், கட்சி பூச்சிய நிலைக்கு இன்று வந்துள்ளது. மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். அதனால்தான் நாம் ஐக்கிய மக்கள் சக்தியாக செயற்படுகின்றோம்.

ரணில் மீது மதிப்பு உள்ளது. ஆனால், அரசியல் ரீதியில் கொள்கை ரீதியில் முரண்பாடு உள்ளது" - என்றார்.

அதேவேளை, அரசுடன் 'டீல்' வைத்துக்கொள்ளாமல் எதிரணியாக சஜித்தின் தலைமைத்துவத்தின் கீழ் பயணிக்க ரணில் விக்கிரமசிங்க முன்வர வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் சிலர்கருத்துத் தெரிவித்தனர். (இ)



# ரணிலின் பெயரை நானே முதலில் முன்மொழிந்தேன்

## நவீன் கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 25

"ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் பாராளுமன்றம் செல்வதற்கு தற்போதைய சூழ்நிலையில் மிகவும் பொருத்தமானவர், தகுதியானவர் ரணில் விக்கிரமசிங்கவே என்பதில் மாற்று கருத்து கிடையாது. அவர் சபைக்கு செல்ல வேண்டும் என அவரின் பெயரை ஜனவரி மாதம் நானே முதலில் முன்மொழிந்தேன்."

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் நவீன் திஸநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஆளுங்கட்சியிலுள்ள உறுப்பினர்கள் அதிருப்தியில் இருக்கின்றனர். அவர்கள் ரணிலுடன் பேச்சு நடத்துகின்றனர். பெரும்பாலானவர்கள் ரணிலுடன் இணைந்து செயல்படுவார்கள்" - என்றார். (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 442 பேர் கைது

கொழும்பு, ஜூன் 25

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய மேலும் 442 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதற்கமைவாக கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி முதல் இதுவரை தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றத்தில் 42 ஆயிரத்து 789 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேல் மாகாணத்துக்கு உட்பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் பகுதிகளில், நேற்றுமுன்தினம் 3 ஆயிரத்து 935 வாகனங்களில் வந்த 6 ஆயிரம் பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் அவர் மேலும் கூறினார். (இ)

# வேகமாக பரவும் டெல்டா திரிபு: அபாய நிலையில் ஐரோப்பா!



ஸ்ராக்ஹோம், ஜுன் 25

வேகமாகப் பரவக்கூடிய ஆபத்தான கொரோனா வைரஸின் திரிபான டெல்டா ஐரோப்பிய நாடுகளில் மீண்டும் வேகமாகப் பரவிவருகிறது. இதனால் எதிர்வரும் வாரங்களில் தொற்று நோய் நெருக்கடி மேலும் அதிகரிக்கக் கூடும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் (ECDC) எச்சரித்துள்ளது.

இவ்வாறான நிலையில் சமூக இடைவெளி, முகக் கவசம் அணிதல், பயணக் கட்டுப்பாடு உள்ளிட்ட சுகாதார வழிகாட்டல்களை முன்னெடுக்க வேண்டும், தடுப்பூசி போடும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும். இல்லையேல் 2020 இலையுதிர் காலத்தில் எதிர்கொண்ட தீவிர தொற்று பரவல், பெருமளவு மரணங்கள் போன்ற நிலை மீண்டும் உருவாகும் என்றும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

அத்துடன், டெல்டா திரிபு வைரஸ் தாக்கத்தைக் குறைக்க இரண்டாவது தடுப்பூசியை விரைவில் வழங்கவேண்டும் என்றும் ஐரோப்பிய நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு மையம் வலியுறுத்தியுள்ளது.

இந்தியாவில் முதன்முதலில் அடையாளம் காணப்பட்ட டெல்டா திரிபு, பிரிட்டனில் முதன்முதலில் கண்டறியப்பட்ட அல்பாவை விட 40 முதல் 60 வீதம் அதிகமாகப் பரவக்கூடியது.

உலக சுகாதார ஸ்தாபனத்தால் கவலைக்குரிய திரிபு என்று வகைப்படுத்தப்பட்ட டெல்டா, அடுத்துவரும் வாரங்களில் ஐரோப்பாவில் வேகமாகப் பரவும். அத்துடன் இது பெரும் தாக்கங்களை ஏற்படுத்தும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சகல திரிபு வைரஸ்களையும் எதிர்க்கும் 'சுப்பர்' தடுப்பூசி!



வாஷிங்டன், ஜுன் 25

கொரோனா வைரஸின் சகல திரிபுகளையும் எதிர்க்கும் 'சுப்பர்' தடுப்பூசியை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அமெரிக்காவின் வடக்கு கரோலினாவின் மருத்துவப் பல்கலைக்கழகத்தை சேர்ந்த விஞ்ஞானிகள், சுப்பர் வக்ஸின் என்று குறிப்பிடப்படும் ஹைபிரிட் தடுப்பு மருந்தை உருவாக்கியுள்ளனர்.

கொரோனா வைரஸின் ஆபத்தான அமைப்பான 'ஸ்பைக்' புரதத்தின் பல்வேறு வகைகளுக்கு எதிராக, எதிர்ப்பு சக்தியை இந்த தடுப்பு மருந்து உருவாக்குவது, எலிகள் மீதான பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. நோய்த் தொற்று ஏற்படாமல் தடுப்பதோடு, நுரையீரல் பாதிப்பு ஏற்படுவதையும் தடுப்பதாக ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கொரோனா நோய்த் தொற்றை உருவாக்கும் கொரோனா வைரஸ்கள் மட்டுமின்றி, விலங்குகளில் இருந்து மனிதர்களுக்கு பரவக்கூடிய வாய்ப்பு உள்ள பிற கொரோனா வைரஸ்களுக்கு எதிராகவும் தடுப்பாற்றலை ஏற்படுத்தும் வகையில், தடுப்பு மருந்து வடிவமைக்கப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த தடுப்பு மருந்து அடுத்த ஆண்டில் மனிதர்களுக்கு செலுத்தி பரிசோதிக்கப்படவுள்ளது. (ஐ)

# டெல்டா திரிபு வைரஸ் 85 நாடுகளில் பரவல்!

ஜெனிவா, ஜுன் 25

உலகம் முழுவதும் பரவி வரும் டெல்டா திரிபு வைரஸ் 85 நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பின் தொற்று நோய் தடுப்பு மையம் தெரிவித்தவை வருமாறு, "டெல்டா வைரஸ் உலகம் முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. சுமார், 85 நாடுகளில் டெல்டா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது.

அல்பா, பீற்றா, காமா, டெல்டா போன்ற கொரோனா வைரஸின் திரிபுகளை தீவிரமாகக் கண்காணித்து வருகின்றோம். இதில் டெல்டா வைரஸ் அதிக தொற்று தன்மையை கொண்டுள்ளது. டெல்டா வைரஸின் பரவல் தொடர்ந்தால் உலகம் முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த திரிபு வைரஸால் பாதிக்கப்படுபவர்கள் அவசர சிகிச்சை பிரிவுகளில் அதிகம் சேர்க்கப்படுகின்றனர் என்று ஆய்வுகள் கூறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 18 கோடியை கடந்தது உலக தொற்று பாதிப்பு

நியூயோர்க், ஜுன் 24

உலகம் முழுவதும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 18 கோடியை கடந்தது.

நேற்றுவரை 18 கோடியே 3 இலட்சத்து 33 ஆயிரத்து 764 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இதுவரை 16 கோடியே 50 இலட்சத்து 70 ஆயிரத்து 565 பேர் குணமடைந்தனர். மேலும் வைரஸ் தொற்றால் இதுவரை 39 லட்சத்து 6 ஆயிரத்து 774 பேர் உயிரிழந்தனர்.

கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் வரிசையில் அமெரிக்கா, இந்தியா, பிரேசில், பிரான்ஸ், துருக்கி ஆகிய நாடுகள் முதல் 5 இடங்களில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 'அப்பிள் டெய்லி' நாளிதழுக்கு வலிமிகுதியுடன் பிரியாவிடை!



ஹொங்கொங், ஜுன் 25

ஜனநாயக சார்பு நாளிதழான 'அப்பிள் டெய்லி' நாளிதழ் நேற்று தனது கடைசிப் பதிப்பை வெளியிட்டது. இதனை வாங்குவதற்காக கடும் மழைக்கு மத்தியிலும் ஹொங்கொங்கில் ஆயிரக்கணக்கானோர் திரண்டார்கள்.

கடும் மழைக்கு மத்தியில் அப்பிள் டெய்லி ஒரே இரவில் 10 இலட்சம் பிரதிகளை அச்சிட்டது. இது அதன் வழக்கமான பதிப்பு வெளியீட்டை விட 10 மடங்கு அதிகமாகும்.

தேசிய பாதுகாப்பு சட்டத்தை மீறியதாக சீனா அப்பிள் டெய்லி நாளிதழ் மீது குற்றஞ்சாட்டியது. இதற்காக அந்த நிறுவனத்தின் சுமார் 50 கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்களை முடக்கியது. இந்த முடக்கத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும்விதமாக - பீஜிங்கின் கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான ஓர் அடியாகவே பத்திரிகை தனது பதிப்பை நிறுத்தியதாகக் கூறப்படுகின்றது.

நேற்றிரவு முதல் ஹொங்கொங்கில் கடும் மழை பெய்யத் தொடங்கியது. ஆனாலும், அதிகாலையில் மக்கள் மழையையும் பொருட்படுத்தாது நீண்ட வரிசையில் நின்று பத்திரிகையை வாங்கிச் சென்றனர். உள்ளூர் நேரப்படி காலை 10 மணியளவில் அனைத்துப் பிரதிகளும் விற்கப்பட்டன என்று சமூக ஊடகப் பதிவுகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அப்பிள் டெய்லி மூடப்படும் நாளிரவு, அதன் அலுவலகம் அருகே திரண்ட மக்கள் 'எண்ணெய் சேருங்கள்' (ADD oil) என்று கோஷம் எழுப்பினர். இது ஹொங்கொங்கில் மிகப் பிரபலமான போராட்ட வாசகமாகும். இதற்கு "விட்டுவிடாதே" அல்லது "அதற்காக தொடர்ந்து செயல்படு" என்று பொருள்படும். அத்துடன் தமது கைபேசி மூலம் வெளிச்சம் பாய்ச்சி அவர்களுக்கு நன்றியும் ஆதரவும் தெரிவித்தனர். மக்களின் ஆதரவுக்கு நன்றி தெரிவித்த நாளிதழின் ஆசிரி யர்கள். தொடர்ந்தும் டிஜிற்றல் வடிவில் இணைந்திருப்போம் என்று கூறினர்.

26 ஆண்டுகள் வெளியான அப்பிள் டெய்லி நாளிதழ் 2019 முதல் சீனா மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்று உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்து 30 கட்டுரைகளை வெளியிட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதன் விளைவாக அந்த பத்திரிகையின் சொத்துக்கள் முடக்கப்பட்டன என்பதுடன், மூத்த ஊழியர்களும் கைது செய்யப்பட்டனர். அத்துடன் அந்த நிறுவனத்தின் உரிமையாளர் ஜிம்மி லாய்க்கு ஏற்கனவே 20 மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கனடா பாடசாலையில் மீண்டும் பழங்குடி சிறுவர்களின் புதைகுழி!

ஒன்றாறியோ, ஜுன் 25

கனடாவின் குடியிருப்பு பாடசாலை ஒன்றில் மீண்டும் நூற்றுக்கணக்கான பழங்குடியின சிறுவர்களின் மனித எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன. சஸ்காட்செவன் மாகாணத்திலேயே இந்தப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதைகுழியில் இதுவரை கண்டறியப்பட்ட மனித எச்சங்களை விட அதிகம் இருக்கலாம் என்று கூறப்படுகின்றது. இந்தப் பழங்குடியின குடியிருப்பு பாடசாலை 1899 முதல் 1997 வரை இயங்கியது. சஸ்காட்செவனின் தலைநகரான றெஜினாவிலிருந்து கிழக்கே 87 மைல் தொலைவில் இந்தப் பாடசாலை உள்ளது.

19 ஆம் நூற்றாண்டு முதல் 1970 கள் வரை கனேடிய பழங்குடியின சிறுவர்களை இணைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக குடியிருப்பு பாடசாலைகள் இருந்தன. இவற்றில் சுமார் ஒன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்ட பழங்குடி குழந்தைகள் இணைய நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

அத்துடன், அவர்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறவும் கட்டாயப்படுத்தப்பட்டனர். அவர்களின் சொந்த மொழிகளைப் பேச குழந்தைகள் அனுமதிக்கப்படவில்லை.

இந்தப் பாடசாலைகளில் பல பழங்குடியின குழந்தைகள் உடல், உளரீதியாக துன்புறுத்தப்பட்டனர். இந்தப் பாடசாலைக் கட்டமைப்புக்களில் 6 ஆயிரம் சிறுவர்கள் வரை இறந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

கட்டமைக்கப்பட்ட இந்த நடவடிக்கைகள் குறித்து கனேடிய அரசாங்கம் 2008 இல் பாராளுமன்றத்தில் மன்னிப்பு கோரியது. இந்தப் பாடசாலைக் கட்டமைப்புக்களில் பாலியல் துஷ்பிரயோகம் உள்ளிட்ட துன்புறுத்தல்கள் பரவலாக இருந்ததையும் கனடிய அரசாங்கம் ஒப்புக்கொண்டது. (ஐ)

ஈழநாடு



# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்: சம்பியனானது நியூஸிலாந்து!

சௌதாம்ப்டன், ஜூன் 25

இந்தியாவை 8 விக்கெட்களால் வீழ்த்தி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தைக் கைப்பற்றியது நியூஸிலாந்து.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரை கடந்த 2019ஆம் ஆண்டு ஆரம்பித்தது. டெஸ்ட் கிரிக்கெட் விளையாடும் நாடுகள் பங்கேற்ற இந்தத் தொடரின் இறுதிப் போட்டிக்கு நியூஸிலாந்து - இந்தியா தகுதி பெற்றன.

கடந்த 18ஆம் திகதி இங்கிலாந்தின் சௌதாம்ப்டனில் இறுதிப் போட்டி தொடங்கியது. மழை காரணமாக முதல் நாள், நான்காம் நாள் ஆட்டங்கள் இரத்தாகின. இதனால், வெற்றி தோல்வியை தீர்மானிக்க மேலதிகமாக ஒருநாள் வழங்கப்பட்டது.

முதல் இனிங்ஸில் இந்தியா சகல விக்கெட்களையும் இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு நியூஸிலாந்து சகல விக்கெட்களையும் 249 ஓட்டங்களைப் பெற்றது. 32 ஓட்டங்களால் அந்த அணி முன்னிலை பெற்றது.

தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸில் இந்தியா 170 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. 139 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடியது நியூஸிலாந்து.




தொடக்கம் கொடுத்த ரொம் லதம்(9 ஓட்டங்கள்), கொன்வே (19) அஸ்வின் பந்தில் வீழ்ந்தனர். ஆனால், அனுபவ வீரர்களான அணித் தலைவர் வில்லியம்ஸன், ரோஸ் ரெய்லர் ஆகியோர் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அணியை வெற்றி பெற வைத்தனர்.

வில்லியம்ஸன் 52, ரெய்லர் 47 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

இதனால், 8 விக்கெட்களால் நியூஸிலாந்து வெற்றிபெற்று உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தை கைப்பற்றியது.

இரு இனிங்ஸ்களிலுமாக 7 விக்கெட்களை கைப்பற்றிய கைல் ஜமைசன் போட்டி நாயகனாகத் தெரிவானார். (ஐ)

# அதிக விக்கெட்கள் வீழ்த்திய அஸ்வின்!




சௌதாம்ப்டன், ஜூன் 25

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் அதிக விக்கெட்கள் வீழ்த்திய வீரர் என்ற பெருமையை இந்தியாவின் ரவிச்சந்திரன் அஸ்வின் பெற்றுள்ளார்.

14 போட்டிகளில் 71 விக்கெட்களை வீழ்த்தியதன் மூலமே அவர் இந்தப் பெருமையைப் பெற்றார். அவருக்கு அடுத்து 70 விக்கெட்களுடன் அவுஸ்திரேலிய வீரரான பட் கம்மின்ஸ் உள்ளார்.

அதிக விக்கெட்களை வீழ்த்திய முதல் ஐந்து வீரர்களின் விவரம் வருமாறு:-

அஸ்வின் - 71 விக்கெட்கள், கம்மின்ஸ் - 70 விக்கெட்கள், பிராட் - 69 விக்கெட்கள், சௌதி - 56 விக்கெட்கள், லயன் - 56 விக்கெட்கள். (ஐ)



# இலங்கைக்கு எதிரான ரி-20; இங்கிலாந்து இலகு வெற்றி!

கார்டிப், ஜூன் 24

இலங்கைக்கு எதிரான முதல் இருபது - போட்டியை 8 விக்கெட்களால் வெற்றி கொண்டது இங்கிலாந்து அணி.

இங்கிலாந்துக்கு சென்றுள்ள இலங்கை அணி 3 இருபது - 20 போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டி நேற்று முன்தினம் இரவு நடந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தனுஷ்க குணதிலக, அவிஸ்க பெர்னாண்டோ தொடக்கம் கொடுத்தனர். அவிஸ்க ஓட்டம் எதையும் பெறாமலே ஆட்டமிழந்தார். ஆனால், அடுத்துவந்த அணித் தலைவர் குஷல் பெரேரா பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

குணதிலக 3 பௌண்ட்ரிகளுடன் 19 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த குஷல் மெண்டிஸ் 9, தனஞ்சய டி சில்வா 3 ஓட்டங்கள் என சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறினர்.

ஓரளவு பொறுப்புடன் ஆடிய குஷல் பெரேரா ஒரு பௌண்ட்ரி ஒரு சிக்ஸருடன் 30 ஓட்டங்களை பெற்றார்.

எனினும் ஆறாவது வீரராக களம்புகுந்த தசூன் சேனநாயக்க சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 3 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 50 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 7 விக்கெட்களை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் சாம் கரன், அடில் ரசீத் ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

130 ஓட்டங்கள் என்ற இலகு இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடியது இங்கிலாந்து. ஜசன் றோய், ஜோஸ் பட்லர் தொடக்கம் கொடுத்தனர்.

இருவரும் சிறப்பான ஆரம்ப அடித்தளத்தை இட்டனர். 22 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 22 பந்துகளில் 36 ஓட்டங்களைப் பெற்று றோய் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த டாவின் மலன் 7 ஓட்டங்களுடன் உதானவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

17.1 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்த இங்கிலாந்து 8 விக்கெட்களால் இலகு வெற்றி பெற்றது.

பட்லர் 8 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 68 ஓட்டங்களையும், பெயர்ஸ்ரோ 13 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

இலங்கையின் பந்துவீச்சில் இசுறு உதான, துஷ்மந்த சாமீர ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

போட்டியின் நாயகனாக பட்லர் தெரிவானார். (ஐ)

# '16 அணிகள்' சுற்றுக்கு இங்கிலாந்து முன்னேறியது

லண்டன், ஜூன் 26

இங்கிலாந்து, செக் குடியரசை 1 - 0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி யூரோ கிண்ணத் தொடரில் '16 அணிகள்' சுற்றுக்கு முன்னேறியது.

ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான உதைபந்தாட்டத் தொடரில் டி பிரிவில் இங்கிலாந்து அணி இடம்பெற்றுள்ளது. லண்டன் நகரில் இடம்பெற்ற போட்டியில் இங்கிலாந்து - செக் குடியரசு அணிகள் மோதின.

போட்டி ஆரம்பித்த இரண்டாவது நிமிடத்தில் இங்கிலாந்தின் ரஹீம் ஸ்ரெர்லிங் தடுப்பாட்ட வீரர்கள் இல்லாத செக் குடியரசின் கோல் கம்பங்களை நோக்கி பந்தை கொண்டு சென்றார். ஆனால், அவர் அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டு துரதிர்ஷ்டவசமாக திரும்பியது.

ஆனாலும், 10ஆவது நிமிடத்தில் அவர் கோல் ஒன்றைப் போட்டார். சக வீரர் கிரேலிஷ் உயர்த்தி அடித்துக் கொடுத்த பந்தை இடதுபுற கோல் கம்பத்திற்கு அண்மையாக நின்ற ரஹீம் ஸ்ரெர்லிங் தலையால் முட்டி கோல் ஆக்கினார்.

பதிலுக்கு கோல் அடிக்க செக் வீரர்கள் முயன்றபோதும் அந்த முயற்சிகள் கைகூடவில்லை. இதேபோன்று இங்கிலாந்து வீரர்களாலும் போட்டி முடிவடையும் வரை கோல் அடிக்க முடியவில்லை.

இறுதியில் இங்கிலாந்து அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ஐ)





# டெஸ்ட் தரவரிசை ஜடேஜா முதலிடம்!

டுபாய், ஜூன் 25

ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையின் சகலதுறை வீரர்களுக்கான பட்டியலில் இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜா முதலிடம் பிடித்துள்ளார்.

அவர் 386 புள்ளிகளுடன் அந்த இடத்துக்கு வர, மேற்கிந்தியத் தீவுகளின் ஜேசன் ஹோல்டர் (384), இங்கிலாந்தின் பென் ஸ்டோக்ஸ் (377) ஆகியோர் முறையே அடுத்த இரு இடங்களில் உள்ளனர்.

மற்றோர் இந்தியரான அஸ்வின் 353 புள்ளிகளுடன் 4-ஆம் இடத்தில் இருக்கிறார். இதர பிரிவுகளில் மாற்றம் இல்லாத நிலையில், இந்திய வீரர்களைப் பொறுத்தவரை பந்துவீச்சாளர்கள் பட்டியலில் அஸ்வின் 850 புள்ளிகளுடன் தொடர்ந்து 2-ஆவது இடத்தில் இருக்கிறார். (ஐ)

# தவறுகளை உடன் திருத்தாவிடின் நாட்டின் நிலைமை மோசமடையும்

## அரசுக்கு ஹக்கீம் பகிரங்க எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 25

**"ஆட்சி செய்வதில் சீர்திருத்தங்களை ஏற்படுத்திக் கொள்வதோடு, அரசு இழைத்து வரும் தவறுகளையும் உடனடியாகத் திருத்திக்கொள்ளவேண்டும் சிறுபான்மையினரின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதும் அவசியமாகும். இல்லையேல் நாட்டின் நிலைமை மோசமடையும்."**

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவையாவன: -

கொரோனா வைரஸ் தொற்று பொதுவாக உலகம் முழுவதிலும் குறிப்பாக, இலங்கையில் மிகவும் தீவிரமாகப் பரவிக் கொண்டிருக்கும் வேளையில் , நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. நிதி முகாமைத்துவமானது உறுதியான நிதி சார்ந்த தீர்மானங்கள், பொருளாதார யதார்த்தங்கள், பொருளியல் அடிப்படைகள் ஆகியவற்றை அனுசரித்தே மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போதைய அரசியல் நிகழ்ச்சி நிரலானது எதிர்காலத்தை முன்னோக்கித் தீர்மானங்களை எடுப்பதில் திட்டவட்டமற்ற நிலைமையையே காண்பிக்கின்றது.

ஐரோப்பிய ஒன்றியம் அதன் பாராளுமன்றத்தில் இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீளப்பெறுவதை வற்புறுத்துவதெனத் தீர்மானித்துள்ளது.

இன்று (நேற்றுமுன்தினம்) காலையில் நிதி இராஜாங்க அமைச்சர் இங்கு உரையாற்றுகையில், ஜி.எஸ்.பி. பிளஸ் விவகாரத்தில் அரசு இராஜதந்திர வழிமுறைகளைக் கையாளுகின்ற அதேவேளையில், நிபந்தனைகளைப் பொறுத்தவரை அதற்கு நிகரான வேறு மாற்று



வழிகளையும் கண்டறிய வேண்டும் என்றார்.

மாற்று வழிவகைகளைத் தேடுவதற்கு முன்னர் கள நிலவரத்தின் யதார்த்தத்தைப் பற்றிச் சிந்தியுங்கள்.

மத்திய வங்கியின் 2020ஆம் ஆண்டு ஆண்டறிக்கையின் பிரகாரம் ஏற்றுமதி பெறுமதி எல்லாமாக 9.8பில்லியன் ஆகும். அதில் ஐரோப்பிய ஒன்றியம் எங்களது மொத்த ஏற்றுமதியில் 31.6 வீதத்தைக் கொள்வனவு செய்கின்றது. அது அமெரிக்க டொலர் 3.1பில்லியன் பெறுமதியானது. ஐக்கிய அமெரிக்கா எங்களது ஏற்றுமதியில் 24.9 வீதத்தைக் கொள்வனவு செய்கின்றது. அது அமெரிக்க டொலர் 2.5 பில்லியனுக்கு சமமானது. மத்திய கிழக்கு நாடுகள் எங்களது ஏற்றுமதியில் 9.1 வீதத்தைக் கொள்வனவு செய்கின்றன. அது 900 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியானது. இந்தியா எங்களது மொத்த ஏற்றுமதியில் 6 வீதத்தைக் கொள்வனவு செய்கின்றது. அது 606 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியானது. இவ்வாறான எல்லா நாடுகளையும் ஒன்றாகச் சேர்த்து நோக்கும்போது இலங்கை பெறுகின்ற ஏற்றுமதி வருமானம் 7.1 பில்லியன் அமெரிக்கா டொலர்களாகும்.

இவையனைத்தும் இப்பொழுது தடைப்படப்போகின்றன. மனித உரிமைகள் விடயத்தில் எமது நாடு நடந்து கொள்கின்ற நிகழ்ச்சி நிரலின் விளைவாகவே இந்த நிலைமை ஏற்படுகின்றது. ஆகையால்தான், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீளப் பெறுமாறு அல்லது அதனை மீள்பரிசீலனை செய்யுமாறு ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்துகின்றது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை பாவித்து உங்களது பலத்தைக் காண்பிக்க முயற்சிக்கின்றீர்கள். அதைக்கொண்டு அரசியல் எதிரிகளை கைது செய்கின்றீர்கள். அப்பாவிப் பொதுமக்களை நீண்ட காலமாகத் தடுத்து வைத்திருக்கின்றீர்கள். அவர்களை வற்புறுத்தி ஒப்புதல் வாக்கு மூலங்களைப் பெற்றுக் கொள்கின்றீர்கள்.

இவற்றின் காரணமாகத்தான் நாம் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை இழக்க நேர்ந்துள்ளது. பெரும்பாலும் 7.1 பில்லியன் ஏற்றுமதி வருமானத்தை மேற்கு நாடுகளிடமிருந்து இலங்கை இழக்கின்றது.

அரசு எதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளவில்லை.

சீனாவுக்கு செலுத்தும் இறக்குமதிக்கான கொடுப்பனவு 3.6பில்லியன் ஆகும். அது பெரும்பாலும் எமது மொத்த ஏற்றுமதி வருமானத்துக்குச் சமமானது. எல்லா பணத்தையும் சீனாவுக்கு தாரை வார்க்கின்றீர்கள். இதுதான் யதார்த்தம். நண்பர்கள் சிலரில் தங்கியிருக்கப் போய் ஏனைய நண்பர்களைப் பகைத்துக் கொள்கின்றீர்கள்.

எங்களது வெளிநாட்டுக் கொள்கையை தொடர்ந்தும் இவ்வாறு முன்கொண்டு செல்ல முடியாது. அதில் மாற்றம் வர வேண்டும். அரசு இழைக்கும் இவ்வாறான தவறுகளை உடனடியாகத் திருத்திக்கொள்ள வேண்டும். இந்த நாட்டை நீங்கள் ஆட்சி செய்வதில் சீர்திருத்தங்கள் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். சிறுபான்மையினரதும், சிறுபான்மை சமயத்தினரின தும் சுதந்திரத்தை உறுதிப்படுத்துங்கள்.

மனித உரிமை ஆணையகத்தின் முன் உங்களது நிலைமை மிகவும் கவலைக்கிடமானதாக இருக்கின்றது. ஜெனிவாவில் மனித உரிமை ஆணையகத்தின் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையின் பாரதூரத்தைப் பாருங்கள். அது பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளவர்களின் மரணம் பற்றியும் குறிப்பிடப்படுகின்றது.

ஒரு வருடத்துக்குள் பொலிஸாரின் பாதுகாப்பிலிருந்த ஏழு நபர்கள் மரணித்தனர். குற்றம் நிகழ்ந்த இடத்தைக் காண்பிப்பதற்கென அழைத்துச் சென்றுவிட்டு, ஜீப் வாகனத்திலிருந்து தப்பிச் செல்ல முற்பட்டதால் சுடப்பட்டு உயிரிழந்தாரென கூறப்படுகின்றது. போதைப்பொருட்களைக் காண்பிப்பதற்காக கூட்டிச் செல்லப்படுபவர்கள் சிலரும் மரணித்து விட்டதாகக் கூறப்படும் சம்பவங்களும் இடம் பெறுகின்றன. இவை மிகவும் பாரதூரமான விடயங்களாகும்.

இவ்வாறான காரணங்களாலேயே ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையையும் இழக்கப் போகின்றீர்கள். அவ்வாறானால், பாரிய உற்பத்தியாளர்கள் எவ்வாறாயினும், நடுத்தர சிறிய ரக உற்பத்தியாளர்களினதும், ஊழியர்களினதும் நிலைமை என்னவாகப் போகின்றது? இதன் இறுதியான பெறுபேறாக நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்துக்குள் தள்ளப்படப் போகின்றது" - என்றார்.

(இ)

# மரண அறிவித்தல்

மலர்வு
18
-
09
-
1939



உதிர்வு
20
-
06
-
2021

## வேலுப்பிள்ளை பரமநாதன்

*(முன்னாள் அச்சக முகாமையாளர், சி.க.கூ சங்கம்)*

யாழ். மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், முள்ளானை இளவாலை, வவுனியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பரமநாதன் அவர்கள் கடந்த 20.06.2021 ஞாயிற்றுக் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை – அன்னப்பிள்ளை தம்பதியரின் இரண்டாவது மகனும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை – நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சுசிலாதேவியின் அன்புக் கணவரும்,கஜசிறி ( கஜன் – சுவிஸ் ), நிறஞ்சனா ( சுவிஸ் ), ஜெயசிறி (பிரித்தானியா), சுபசிறி (மலேசியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,கபிலர், பாலகௌரி, கல்பனா, பிரியதர்ஷினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,காலஞ்சென்ற செந்தில்நாதன், பாக்கியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜீவறஞ்சிதமலர், செல்வநாயகி ஆகியோரின அன்பு மைத்துனரும்,

சுவிஸைச் சேர்ந்த பௌத்திரி, மாதிரி, யதுஷா, டினுஷா, விபுஷன், பிரித்தானியாவைச் சேர்ந்த கிருஷ்மிகா, சர்விகா, மலேசியாவைச் சேர்ந்த வன்சிகா, சஸ்மிதா, சஸ்விக்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தற்போதைய வீட்டு முகவரி:
இல 22, லக்ஷ்மி வீதி,
தோணிக்கல், வவுனியா.

தகவல்
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு : **ஜெயசிறி - மகன்**
Mobile : +447501919275

# ஒரே கிராமத்தில் 40 பேருக்கு தொற்று

கொழும்பு, ஜூன் 25

வெலிமடை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பொரகஸ், ஹூலங்காபொல பகுதியில் 40 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களாக அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்பை பேணிய 30 பேருக் கும், எழுமாறாக எடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோத னைகளில் 10 பேருக்கும் கொவிட் தொற்று உறுதியாகி யுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொற்றாளர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பப்பட் டுள்ளனர்.

அதிக தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதால் அந்த பகுதிகளில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடுவதற்கு பிரதேசத் துக்கு பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். செய்யப்பட்டுள்ளனர்.

# நீர்கொழும்பு வர்த்தகர் கொலை; மனைவி உட்பட இருவர் கைது!

கொழும்பு, ஜூன் 25

நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அவரது மனைவி உட்பட இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கொலை சம்பவம் கடந்த 2020 ஒக்ரோபர் 3ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் உறவினர்கள் பொலிஸில் வழங்கிய முறைப்பாட்டுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து உயிரிழந்த நபரின் மனைவியும், அவரது வீட்டுப் பணியாளர் ஒருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

(அ)

## பொதுமன்னிப்பு...

இந்த கேள்விகளுக்கான பதில்கள் திருப்திகரமானவையாக அமையாத பட்சத்தில், துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட பொதுமன்னிப்பு நியாயமற்றது என்றும் அது சட்டத்தின் ஆட்சியும் நீதித்துறையின் மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் சீர்குலைவதற்கே வழிவகுக்கும் என்றும் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

சட்டவிரோதமான ஒன்றுகூடலில் அங்கம் வகித்தமை மற்றும் கொலைக்குற்றச்சாட்டின் அடிப்படையில் மேல்நீதிமன்றத்தினால் மரணதண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் அந்தத் தீர்ப்பு முன்னாள் பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் தலைமையிலான உயர்நீதிமன்றத்தின் விசேட குழுவினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தண்டனைக்குள்ளான துமிந்த சில்வா ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ள விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம்.

ஜனாதிபதி இத்தகைய பொதுமன்னிப்பை வழங்குவதற்கு இலங்கை அரசமைப்பின் 34(1) ஆம் சரத்தின் கீழ் அனுமதியளிக்கப்பட்டிருக்கும் அதேவேளை, அதில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய குறித்த வழக்கை நடத்திய நீதிபதியிடமிருந்து அறிக்கை பெறப்பட வேண்டும்.

பின்னர் அந்த அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் சட்டமா அதிபர் மற்றம் நீதியமைச்சர் ஆகியோரின் ஆலோசனையும் பெறப்படவேண்டும். அவர்கள் இருவரும் அதுகுறித்த தமது பரிந்துரைகளை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

எனவே, இந்த பொதுமன்னிப்பானது குறித்த வழக்கை விசாரணை செய்து தீர்ப்பளித்த நீதிபதிகள், சட்டமா அதிபர் மற்றும் நீதியமைச்சர் ஆகியோரின் ஆலோசனைக்கமைவாக வழங்கப்பட்டதா என்பதைத் தெரிந்துகொள்ளும் உரிமை பொதுமக்களுக்கு இருக்கின்றது.

ஆகவே இது விடயத்தில் மேற்படி தரப்பினரால் அறிக்கையோ, அபிப்பிராயமோ அல்லது பரிந்துரைகளோ முன்வைக்கப்பட்டதா என்பதையும் அவ்வாறெனில் துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு பரிந்துரைக்கப்பட்டதா அல்லது வழங்கவேண்டாம் என்று பரிந்துரைக்கப்பட்டதா என்பதையும் வெளிப்படுத்துமாறு கோரி ஜனாதிபதிக்கு நாம் கடிதமொன்றை அனுப்பி வைத்திருக்கிறோம்.

இவ்வாறான பொதுமன்னிப்பை வழங்குவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்குக் காணப்பட்டாலும், அது எப்போதும் சட்ட ரீதியாகவே அணுகப்பட வேண்டும். அத்தகைய அதிகாரம் தன்னிச்சையான முறையிலோ அல்லது தெரிவு செய்யப்பட்ட அடிப்படையிலோ பயன்படுத்தப்படக்கூடாது.

கடந்த காலத்திலும் பொதுமன்னிப்பு வழங்குவதற்கு எந்த அடிப்படையில் கைதிகள் தெரிவு செய்யப்பட்டார்கள் என்ற விடயம் தெளிவுபடுத்தப்படாமல், சில கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டமை தொடர்பில் நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

அத்தகைய சந்தர்ப்பங்களிலும் சட்டத்தரணிகள் சங்கம் தற்போது எடுத்திருக்கும் நிலைப்பாட்டையே எடுத்திருந்தது. ஆகவே இதுகுறித்து ஜனாதிபதிக்கு எழுதியிருக்கும் கடிதத்தில் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் வெளிப்படுத்துமாறு வலியுறுத்தியிருக்கின்றோம்.

அரசமைப்பின் 34(1) ஆம் சரத்தின் கீழ் பொதுமன்னிப்பு வழங்குவதற்கு துமிந்த சில்வா எவ்வடிப்படையில் தெரிவு செய்யப்பட்டார்?, இந்தப் பொதுமன்னிப்பை வழங்கும்போது கவனத்தில் கொள்ளப்பட்ட பிரதான விடயங்கள், தற்போது மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஏனையோரின் வழக்குகளிலிருந்து துமிந்த சில்வாவின் வழங்கு விலக்களிக்கப்படுவதற்கான காரணம், துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதற்கு முன்னர் ஜனாதிபதியினால் இந்த வழக்கை விசாரணை செய்து தீர்ப்பளித்த நீதிபதிகளிடம் அறிக்கை கோரப்பட்டதா? ஆமெனில், அந்த அறிக்கையின் உள்ளடக்கம் என்ன?, இந்தப் பொதுமன்னிப்பு தொடர்பில் சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரப்பட்டதா? ஆமெனில், அதன் உள்ளடக்கம் என்ன?, இந்தப் பொதுமன்னிப்பு தொடர்பில் நீதியமைச்சரிடம் பரிந்துரைகள் கோரப்பட்டதா? ஆமெனில், அதன் உள்ளடக்கம் என்ன? ஆகியவை தொடர்பில் வெளிப்படுத்த வேண்டும் என்றே கடிதம் மூலம் கோரியிருக்கிறோம்.

இந்தக் கேள்விகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விகளுக்கான பதில்கள் திருப்தியளிக்கவில்லை எனின், துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட பொதுமன்னிப்பு நியாயமற்றதும் தன்னிச்சையானதுமாகும். அது சட்டத்தின் ஆட்சி சீர்குலைவதற்கும் நீதித்துறையின் மீது பொதுமக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை வீழ்ச்சி காண்பதற்குமே வழிவகுக்கும்-என்றுள்ளது.

## 1,941 பேருக்கு...

நேற்று இரண்டாயிரத்தை விடவும் குறைவாகப் பதிவாகியுள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 48 ஆயிரத்து 50 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன்,கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,639 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 12 ஆயிரத்து 825 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 32 ஆயிரத்து 411 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## பரபரப்புக்கு...

தனிப்பட்ட பயணம் மேற்கொண்டு பஸில் ராஜபக்ஷ கடந்த மே 11 ஆம் திகதி அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார்.

இவரின் இந்தப் பயணம் தொடர்பாக எதிர்க்கட்சியினரால் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை, இவர் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த காலப்பகுதியில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குள் குழப்ப நிலையும் ஏற்பட்டிருந்தது. அத்துடன் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டமை தொடர்பில் அந்தக் கட்சியின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசுக்கு எதிரான விமர்சனங்களை முன்வைத்திருந்தனர்.

பஸில் ராஜபக்ஷ நாட்டில் இருந்திருந்தால் எரிபொருள் விலையை அதிகரிக்க இடமளித்திருக்க மாட்டார் என்றும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், பஸில் ராஜபக்ஷ நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளார்.

இவர் மீண்டும் நாடு திரும்பியுள்ளமை கொழும்பு அரசியலில் பரபரப்பு நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. (இ)

## மனித உரிமை...

ளது.

சக அரசியல்வாதியை கொலை செய்தார் என தண்டனை வழங்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவிற்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளமை சட்டத்தின் ஆட்சியை பலவீனப்படுத்தும். பொறுப்புக்கூறலை அலட்சியப்படுத்தும்.

தெரிவு செய்யப்பட்ட தன்னிச்சையான பொதுமன்னிப்பு வழங்கும் நடவடிக்கைக்கு சிறந்த உதாரணம் என ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# ராஜபக்ஷ அரசுடன் தமிழக அரசு உறவை வலுப்படுத்த வேண்டும்

## சுப்பிரமணியன் சுவாமி சொல்கின்றார்



சென்னை, ஜூன், 25

தமிழகத்தின் புதிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு இலங்கையின் ராஜபக்ஷ அரசாங்கத்துடன் நட்புறவுடன் கூடிய உறவுகளை வலுப்படுத்திக்கொள்ள வேண்டும் என முன்னாள் இந்திய மத்திய அமைச்சரும் ஜனதா கட்சித் தலைவருமான சுப்பிரமணியன் சுவாமி வலியுறுத்தியிருக்கின்றார்.

இது தொடர்பில் தனது டுவிட்டர் தளத்தில் பதிவு ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார். இதில் "திமுக.வின் பல தலைவர்களுடைய சொத்துக்கள் தென்னிலங்கையில் உள்ளன" எனவும் சுப்பிரமணியன் சுவாமி குறிப்பிட்டிருக்கின்றார்.

## பாரத லக்ஸ்மன்...

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி விசேட பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார்.

மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் 2012ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது கொழும்பு, முல்லேரியா பகுதியில் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர மற்றும் துமிந்த சில்வா ஆகியோர் தலைமையிலான குழுவினருக்கிடையில் பரஸ்பர துப்பாக்கிச் சூடு இடம்பெற்றது. இதில் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உட்பட மேலும் சிலர் கொல்லப்பட்டனர். துமிந்த சில்வா உள்ளிட்டவர்கள் காயமடைந்தனர்.

குறித்த கொலை வழக்கில் கொழும்பு மேல் நீதிமன்றம் 2016 ஆம் ஆண்டு துமிந்த சில்வாவுக்கு மரணதண்டனைத் தீர்ப்பளித்தது. இந்நிலையிலேயே அவர் ஜனாதிபதியின் விசேட பொதுமன்னிப்பின் கீழ் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவரின் விடுதலைக்கு எதிராக உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. (இ)

## ஜனாதிபதியின்...

நடராஜா சரவணபவன், புருஷோத்தமன் அரவிந்தன், இராசவல்லவன் தவரூபன், இராசதுரை ஜெகன், நல்லான் சிவலிங்கம், சூரிய மூர்த்தி ஜிபோஜன், சிவப்பிரகாசம் சிவ சீலன், மயில்வாகனம் மதியழகன், சூரிய காந்தி ஜெயச்சந்திரன் ஆகியோர் விடு தலை செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சிமியோன் சந்தியோகு, ராகவன் சுரேஷ், சிறிராகமணி, சந்தானம் ஸ்டாலின் ரமேஷ், எம்.எம். அப்துல் சலீம், எட்வேட் ஜூலின் ஆகியோரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த விஸ்வநாதன் ரமேஷ்குமார் என்ற அரசியல் கைதியும் விடுதலையாகியுள்ளார்.

இதேவேளை, விடுதலையான தமிழ் அரசியல் கைதிகள் 16 பேரும் நீதிமன்றங்கள் ஊடாகத் தீர்ப்பு வழங்கப்பட்டு தண்டனை அனுபவித்து வந்தவர்கள் எனவும், விரைவில் அவர்களுக்கான தண்டனைக் காலம் நிறைவடையவுள்ளது எனவும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், இவர்களைப் போன்று சிறைகளிலுள்ள ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் உடன் விடுவிக்க வேண்டும் என்று தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள், அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையிலுள்ள சிறைகளில் 90 இற்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் அடைத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 16 பேரே நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## வடமாகாணத்தில்...

யாழ்.போதனா வைத்தியசாலையில் 611 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 58 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

**யாழ்.மாவட்டத்தில் 34 பேர்**

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 20 பேர்,

யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 05 பேர்,

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 04 பேர்,

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேர்,

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர்,

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒருவர்,

காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர்,

**வவுனியா மாவட்டத்தில் 17 பேர்**

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 17 பேர்,

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 03 பேர்**

ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேர்,

**கிளிநொச்சி மாவட்டத்தில் 04 பேர்**

கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் 04 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் காங்கேசன்துறை கடற்படை முகாமைச் சேர்ந்த ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (அ)

## 45 பேர்...

வர்களில் 27 ஆண்களும், 18 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 814 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## ஜூலை...

ஏற்றுமதி செய்யும் என்று தெரிய வருகின்றது.

இதனால், இலங்கை, பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகள் நன்மையடையும். எனினும், பூட்டானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பின்னரே இந்த நாடுகளுக்கு தடுப்பூசிகள் ஏற்றுமதியாகும் என்று அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

உலகின் மிகப்பெரிய மருந்து உற்பத்தியாளரான இந்தியா ஜனவரி 20முதல் "தடுப்பூசி மைத்ரி" (தடுப்பூசி நட்பு) என்ற பெயரில் மானியம் மற்றும் வர்த்தக ரீதியில் கோவிட் 19 தடுப்பூசிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது. ஆனால், உள்நாட்டில் ஏற்பட்ட 2ஆம் அலை தாக்கம், தடுப்பூசி பற்றாக்குறை காரணமாக ஏப்ரல் மாதத்துடன் தடுப்பூசி ஏற்றுமதி நிறுத்தப்பட்டது. முன்னதாக இந்தியா 6.6 கோடி தடுப்பூசிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருந்தது.

இந்தியாவின் தடுப்பூசி ஏற்றுமதி நிறுத்தப்பட்ட நிலையில், ரஷ்யா, சீனா நாடுகள் தங்கள் தடுப்பூசிகளை ஏற்றுமதி செய்ய முன்வந்தன.

இந்த நிலையில், ஒரே நாளில் 80 இலட்சம் பேருக்கு தடுப்பூசி போடுமளவுக்கு இந்தியாவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால், மீண்டும் தடுப்பூசி ஏற்றுமதி குறித்து இந்தியா கவனம் செலுத்துகின்றது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்கு முன்பாக தடுப்பூசிகளை ஏற்றுமதி செய்ய முடியும் என்று பிரதமர் மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேலும், இவ்வாறு தடுப்பூசி ஏற்றுமதி செய்யப்படும்போது அயல்நாடுகளுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

எனினும், உள்நாட்டு தேவைக்கு போதியளவு தடுப்பூசிகளை உற்பத்தி செய்ய முடியாமல் போனால் ஏற்றுமதி நடவடிக்கைகளை செய்ய முடியாது என்றும் அதிகாரி ஒருவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பாதிக்கப்பட்ட நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவார் பஸில்

## இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 25

"கொரோனாப் பெருந்தொற்று நிலைமையால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டு மக்களுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி நிச்சயமாக நிவாரணங்களை வழங்கும். இந்த நிவாரணங்கள் நாடு திரும்பியுள்ள பஸில் ராஜபக்ஷ ஊடாகக் கிடைக்கும்."

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்தார்.

அமெரிக்காவில் இருந்து பஸில் ராஜபக்ஷ நேற்று நாடு திரும்பிய நிலையில், அது குறித்து ஊடகங்களுக்குக் கருத்துக் கூறும்போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"பஸில் ராஜபக்ஷ நாட்டுக்கு வந்துள்ளார். அவர் ஊடாக மக்களுக்கு கிடைக்குமா?" என்று ஊடகவியலாளர்கள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவிடம் கேட்டனர்.

இதற்குப் பதிலளித்த அவர், "மக்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றோம். தற்போது பஸில் ராஜபக்ச நாட்டுக்கு வந்துள்ளார். அவர் ஊடாக அது கிடைக்கும்" - என்றார்.

இதேவேளை, மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் பஸில் ராஜபக்ச நாட்டின் பொருளாதாரத்தைச் சிறப்பாகக் கொண்டு சென்றார் என்றும், அதேபோன்று நாட்டின் அபிவிருத்தியையும் முன்னெடுத்தார் என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார். (இ)

# இலங்கையில் டெல்டா வைரஸ் அச்சுறுத்தலாக மாறும் ஆபத்து!

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 25

**இலங்கையில் டெல்டா வைரஸ் தொற்றுப் பரவ ஆரம்பித்தால் பாரியளவில் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்று தொற்று நோய்கள் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.**

உலகளவில் வேகமாகப் பரவி வரும் வைரஸ்களில் ஒன்றாக இந்திய வைரஸான டெல்டா வைரஸ் மாற்றமடைவதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த வைரஸின் தாக்கம் இலங்கையிலும் பரவுவதற்கு ஆரம்பித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இந்தநிலையில், இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே கருத்துத் தெரிவிக்கையில்,

"கொரோனா வைரஸ் பரவல் இலங்கைக்கு மாத்திரம் தாக்கத்தை ஏற்படுத்திய ஒன்றல்ல. இது உலகளாவிய வைரஸ் பரவலாகும். ஆகவே, உலகின் ஏனைய நாடுகள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளை நாமும் எதிர்கொண்டு வருகின்றோம். சகல துறைகளிலும் நாம் பொருளாதார ரீதியில் நெருக்கப்பட்டுள்ளோம்.

முதலாம் அலையில் எமக்கு பெரிய தாக்கம் ஏற்படவில்லை என்ற போதும் தற்போது வைரஸ் தன்மை மாறுபட்டு அல்பா என்ற வைரஸ் தொற்றுக்கு முகங் கொடுத்து வருகின்றோம்.

அத்துடன், மரணங்களும், தொற்றாளர் எண்ணிக்கையும் 50 சத வீதத்தால் அதிகரித்துள்ள நிலையில், சுகாதார துறையும் நெருக்கடியை சந்தித்துள்ளது. எனினும், அரசு இந்த நெருக்கடிகளைச் சமாளிக்க சுகாதாரத்துறையை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

பி.சி.ஆர். பரிசோதனை செய்வதற்காக ஒரு நாளைக்கு 7 கோடி 20 இலட்சம் ரூபாய் பணம் செலவிடப் படுகின்றது. இதுவரை 1,500 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அதேபோல் வைரஸ் பரவல் மாறிக் கொண்டுள்ளது. இதில் தற்போது பரவிவரும் இந்தியாவின் டெல்டா வைரஸ் உலகம் முழுவதும் அச்சுறுத் தலை ஏற்படுத்தும் என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆகவே, நாட்டில் டெல்டா வைரஸ் தொற்று பரவ ஆரம்பித்தால் பாரியளவில் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும். இதனைக் கட்டுப்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. இதற்காக அனைவரும் தடுப்பூசிகளைச் செலுத்திக்கொள்ள வேண்டும்" - என்றார். (இ)

# 45 சாராய போத்தல்களுடன் மடுல்சீமையில் ஒருவர் கைது

மடுல்சீமை, ஜூன் 25

மடுல்சீமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெரலப்பத்தனை பெருந்தோட்டப் பகுதியில் 180 மில்லிலீற்றர் கொண்ட 45 சாராயப் போத்தல்களுடன் 41 வயதுடைய நபர் ஒருவர் பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மடுல்சீமை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலொன்றின் அடிப்படையில் நேற்று பகல் மேற்படி தோட்டப் பகுதிக்கு விரைந்த, பொலிஸார் மறைத்து வைக்கப்பட்டிருந்த சாராயப் போத்தல்களை மீட்டுள்ளனர்.

நேற்றைய பொசன் பூரணை தினத்தில் விற்பனை செய்வதற்கே இந்தச் சாராயப் போத்தல்கள் கொண்டு வரப்பட்டிருந்தன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

## உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் உள்ளிட்ட

# ஹெரோயினுடன் கைதான மூவருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜூன் 25

ஹெரோயினுடன் கைதுசெய்யப்பட்ட களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தின் உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் உள்ளிட்ட மூன்று சந்தேகநபர்கள் எதிர்வரும் 08 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

காலி பிரதம நீதிவான் ஹர்ஷன கெக்குனுவல சந்தேகநபர்களுக்கு நேற்று விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பித்தார். 50 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான ஹெரோயினுடன் கடந்த 18ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் தடுப்புக்காவலில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணை நிறைவு பெறவில்லை எனப் போதைப் பொருள் ஒழிப்பு பணியகத்தின் அதிகாரிகள் நீதிமன்றத்துக்கு நேற்று அறிக்கை சமர்ப்பித்தனர்.

சந்தேகநபரான உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் இதற்கு முன்னரும் சீருடையுடன் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதனால் சந்தேகநபரை விளக்கமறியலில் வைத்ததன் பின்னர், ஏனைய சந்தேக நபர்களை தனியாக வைக்குமாறு சிறை அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு போதைப் பொருள் ஒழிப்பு பணியக அதிகாரிகள் நீதிமன்றத்தில் கோரிக்கை முன்வைத்தனர்.

இந்தப் போதைப்பொருள் கடத்தலுடன் வெளிநாடுகளில் உள்ளவர்கள் தொடர்புபட்டுள்ளனர் என்று சந்தேகிப்பதால், தொலைபேசி அழைப்புக்கான தரவுகளை வழங்குமாறு குறித்த தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு உத்தரவிடுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்களை ஆராய்ந்த நீதிவான் தொலைபேசி அழைப்புகளுக்கான தரவுகளைப் பெற்றுக்கொடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (இ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.06.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு- மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை



1.00 மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-அம்பிகாபதி, யா யா திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10

**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்- தமிழர் தேசிய அரசியல்.



10.00 மணி : நேருக்கு நேர்

---

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

---

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

---

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

---

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

---

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

---

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு